விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 13.04.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 134 | பக்கங்கள் : 16






02 பிலவ வருட தமிழ் புத்தாண்டு பிறப்பு நேரங்கள்



06 கனவிலும் கிடைக்காது சமஷ்டி



09 ஜே.வி.பியும் தமிழ் மக்களும்



11 இராணுவத்துக்கு எதிராக வொய்ப் பிரசாரம்

## 5000 ரூபாய் கொடுப்பனவு: அரசின் பொறிமுறை தவறு

### அநுரகுமார எம்.பி. சாடல்



கொழும்பு,ஏப்.13

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு 5000 ரூபாய் கொடுப்பனவு வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்த முடிவுக்கு மக்கள் விடுதலை முன்னணி பாராட்டு தெரிவித்துள்ளது.

இருப்பினும், அதனை வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்த பொறிமுறை 15

## புத்தாண்டு கொண்டாட்டங்களினால் மே மாதத்தில் பெரும் ஆபத்து நேரும்

### சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 13

மக்களில் பெரும்பான்மையினரின் பொறுப்பற்ற நடவடிக்கைகளின் விளைவாக, மே மாதத்தில் பொதுமக்கள் தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டியிருக்கும் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

இதுகுறித்து சுகாதாரப் பரிசோதகர் சங்கத் தலைவர் உபுல் ரோஹண தெரிவிக்கையில்-

சுப்பர் மார்க்கெட்டுகளிலும் பஸ்களிலும் மக்கள் தேவையில்லாமல் கூடிவருவதைக் காணலாம்.

மக்கள் பெருமளவில் கூடுவது மிகவும் தீவிரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

பல பகுதிகளில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் 500 - 1,000 பேருடன் - விதிமுறைகளை மீறி நடத்தப் படுகின்றன. 15

# இராணுவத் தளபதியின் குற்றங்கள் குறித்து 50 பக்க ஆவணக் கோவை!

## நான் விடை பெறும் காலம் தூரமில்லை

### மனோ உருக்கமான பதிவு



கொழும்பு, ஏப். 13

தமிழ் முற்போக்கு கூட்டணி, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியவற்றின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், நான் விடைபெறும் காலம் தூரமில்லை என தனது முகநூல் பதிவில் குறிப்பிட்டுள்ளார். 15

## பிரிட்டனிடம் சமர்ப்பித்தது சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயல்திட்டம்

ஜொகன்னஸ்பேர்க், ஏப்ரல் 13

இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வா குறித்த 50 பக்க ஆவணக் கோவையைத் தொகுத்து அதனை இங்கிலாந்து வெளிநாட்டு பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் தடைகள் திணைக்களத்திற்கு சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயல்திட்டம் சமர்ப்பித்துள்ளது. 15




## முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் மே 18 இல் நினைவேந்தலுக்கு ஏற்பாடு

முல்லைத்தீவு, ஏப். 13

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் நிகழ்வு வரும் மே 18ஆம் திகதி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்யும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முள்ளிவாய்க்கால், தமிழினப் படுகொலை நினைவேந்தல் நினைவு வழமைபோன்று, திட்டமிட்டபடி, இவ்வாண்டும் மே 18ஆம் திகதியன்று சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, முற்பகல் 10.30 மணிக்கு, தமிழினப் படுகொலை, நினைவேந்தல் 15

## போலி பிரசாரத்தை கட்டுப்படுத்த சட்டம்!

### இந்த வாரம் வருகின்றது அமைச்சரவைக்கு

கொழும்பு, ஏப். 13

இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களின் ஊடான போலிப் பிரசாரங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய சட்டத்தைக் கொண்டு வர அரசு தயாராகி வருகின்றது.

அதற்கமைய நீதி அமைச்சு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு இணைந்து 15

## டில்லிக்குச் செல்கிறார் ஜனாதிபதி கோட்டாபய



புதுடில்லி, ஏப். 13

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த மாத இறுதியில் டில்லிக்கு பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார் எனவும் அவர் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் இந்திய ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அல்கொய்டா, அபுசயாப் இயக்கங்களை சேர்ந்த பயங்கரவாதிகள் சமீப காலமாக இலங்கையை தங்கள் தளமாகப் பயன்படுத்த முயற்சித்து வருகின்றனர். அரபு நாடுகள் கிழக்கு, 15

## அரச நிறுவனங்களின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படாவிட்டால் பாரிய நெருக்கடி

### முத்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.13

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் அரசாங்கம் தொடர்பில் நாட்டு மக்கள் மத்தியிலுள்ள நிலைப்பாட்டை நன்கு அறிந்து கொள்ள முடியும்.

அரச நிர்வாகம் பலவீனமடைந்துள்ளது. அரச நிறுவனங்களின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படுத்தாவிட்டால் பாரிய நெருக்கடிகள் ஏற்படும் என அபயராம விகாரையின் விகாராதிபதி முத்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரித்துள்ளார். 15





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவத்...

இந்த சமர்ப்பிப்பு தற்போதைய இலங்கையின் இராணுவத் தளபதியாக இருக்கும் சவேந்திர சில்வா 06 யூலை 2020 இல் உருவாக்கப்பட்ட ஐக்கிய இராச்சியத்தின் உலகளாவிய மனித உரிமைகள் (GHR) தடை பொறிமுறை யின் கீழ் ஏன் கண்டிக்கப்பட வேண்டும்? என வாதிடுகின்றது.

'எங்களிடம் இலங்கையின் போரின் இறுதிக்கட்டம் பற்றி கவனமானமுறையில் சர்வதேச வழக்கறிஞர்கள் மற்றும் சட்டவாளர்கள் மூலம் சேகரித்த ஆதாரங்களைக் கொண்ட விரிவான களஞ்சியம் ஒன்று உள்ளது. இங்கிலாந்தில் தற்போதுள்ள பல பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலம் இந்த சமர்ப்பிப்பை உருவாக்குவதற்கும் சவேந்திர சில்வா மற்றும் அவரது கட்டளைக்கு கீழ் இருந்தவர்களுடனும் இணைப்புகளை உருவாக்குவதற்கும் மிகவும் முக்கியமானதாக இருந்தது' என சர்வதேச உண்மை மற்றும் நீதிககான செயற்திட்ட அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடக்கில் 2009 இல் இடம்பெற்ற சிவில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின்போது 58 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக இருந்த போது சவேந்திர சில்வா வாழ்வுரிமை உட்பட பாரிய மனித உரிமை மீறல்களை மேற்கொள்வதில் அவரது பங்கு குறித்து சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் இந்த சமர்ப்பிப்பு விபரித்துக் கூறுகிறது.

அது பாதுகாப்பு வலயங்கள் எனக் கூறப்பட்ட இடங்களில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் உணவுக்காக வரிசையில் நின்றவர்கள் மீதான எறிகணை மற்றும் குண்டுத் தாக்குதலில் உயிர்தப்பிய தமிழர்களின் கொடுமை நிறைந்த நேரில் கண்ட சாட்சி வாக்குமூலத்திலிருந்து இந்த சமர்ப்பிப்பு உருவாகிறது.

இவர்களில் பலர் தற்போது இங்கிலாந்தில் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள். இங்கிலாந்து அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய பகுதியாக உள்ள பாலியல் வன்புணர்வு உட்பட பாலியல் வன்முறை மற்றும் சித்திரவதையில் சில்வாவின் தொடர் பினை இந்த சமர்ப்பிப்பு கவனமாக ஆராய்கிறது.

'2020 இல் அமெரிக்காவின் இராஜாங்க திணைக்களம் போரின் முடிவில் இடம்பெற்ற மீறல்கள் குறித்து கூறப்பட்ட அவரது வகிபாகத்திற்காக அவரைக் கடுமையாக கண்டனம் செய்தது. ஆனால் இங்கிலாந்தின் தடை பொறிமுறையின் அதிகாரவரம்பு வேலைகள் விரிவானதாக இருப்பதுடன் இராணுவத் தாக்குதலின் போது வைத்தியசாலைகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட ஏனைய பொது மக்களின் இடங்கள் மீதான எறிகணைத் தாக்குதலில் அவரது பங்கினை உள்ளடக்குகிறது. மீறல்களை முழுமையாக அங்கிகரித்தல் மற்றும் அமெரிக்காவின் நடவடிக்கைக்கு ஆதரவு கொடுத்தல் என்பன முக்கியமானது என சூக்கா கருத்து தெரிவித்துள்ளார்.

பிரிட்டனின் கண்டனம் பொறுப் புக் கூறல் தொடர்பில் இன்னுமொரு முக்கிய முன்னோக்கிய படியாக இருக்கும். அத்துடன் அண்மையில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவானதாக இருக்கும். இதற்காக பிரிட்டனே முக்கிய பங்குவகித்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கு இங்கிலாந்தின் புதிய தடை பொறிமுறையினை பிரயோகிப்பது தொடர்பிலான அரசியல் விருப்பம் அண்மைய பாராளுமன்ற விவாதத்தின் போது வெளிபடையாக தெரிந்தது, இந்த விவாதத தில் பதினொரு பாராளுமன்ற உறுப்பினர்கள் சவேந்திர சில்வா உட்பட இலங்கையின் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக இங்கிலாந்து அரசாங்கம் ஏன் தடைகளை விதிக்க வில்லை? எனக் கேட்கிறார்கள், இந்தச் சந்தர்ப்பத்தில் சவேந்திர சில்வாவின் பெயர் ஆறு தடவைகள் குறிப்பிடப்பட்டது எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## புத்தாண்டு..

அடுத்த சில நாட்களில் பொறுப்பற்ற முறையில் செயல்படுவதால் ஏற்படும் விளைவுகளை பொதுமக்கள் எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.

இதனால், சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிப்பவர்களும் பாதிக்கப்படுவார்கள்-என்றார்.

## நான்...

அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில்-

"அன்பார்லிமென்டரி லங்வேஜ்" (Unparliamentary Language) என்று பொதுவாக சொல்வார்கள். சபையில் பயன்படுத்த "கூடிய, கூடாத" வார்த்தைகள் என்று இருக் கின்றன.

ஒருமுறை இன்று அமைச்சராக இருக்கும் ஓர் இடதுசாரி எம்.பி, பிரதமர் ரணிலை மிக மோசமான சிங்கள கெட்ட வார்த்தையில் சபையில் திட்டினார்.

பதிலுக்கு ரணில் தூஷணம் பயன்படுத்தவில்லை. தூஷணம் பேசிய எம்.பியை பார்த்து, "காய்ந்த பூசணிக்காய்" என கிண்டலாக சொன்னார்.

ரணிலிடம் நம்ப முடியாத நகைச்சுவை உணர்வு இருக்கின்றது. என்னிடம் அது எக்கச்சக்கமாக கொட்டிக் கிடக்கின்றது.

"தூஷணம்" என்பது மட்டுமல்ல, "எல்லை மீறிய" வார்த்தை பிரயோகங்களும், 'அன்பார்லிமென்டரி"தான்.

சமீபத்தில், கொழும்பில் கொரோனாவினால் மூடப்பட்டிருந்த பிரதேச குடும்பங்களுக்கு, ஒரு வாரத்திற்கு 5000 ரூபா வழங்கவேண்டும் என நான் வாதிட்டபோது,

இன்றைய அமைச்சர் ஒருவர் என்னை "மடையா" (மோடயா) என்று திரும்ப, திரும்பத் திட்டினார்.

நான் பதட்டப்படாமல், நான் கூறியதை மாத்திரம் திரும்ப, திரும்ப கூறினேன். கடைசியில் மக்களுக்கு அந்த ரூ. 5000 பெருவாரியாக கொழும்பில் கிடைத்தது.

அச்சந்தர்ப்பத்தில் சபையில் இருந்த எனது நண்பர்கள் என்னையும், அந்த அமைச்சரை நோக்கிக் கடுமையான வார்த்தைப் பிரயோகம் செய்யும்படி சொன்னார்கள்.

நான் அப்படி முறைதவறி வார்த்தைகளை பயன்படுத்த மறுத்துவிட்டேன்.

சபையில் மட்டுமல்ல, பொதுவாக நான் கண்ணியக்குறைவான வார்த்தைகளை எங்கேயும், சொல்லாலும், எழுத்தாலும் பயன்படுத்துவதில்லை.

பல நூற்றுக்கணக்கான தமிழ், சிங்கள, ஆங்கில நேரலை ஊடக நிகழ்வுகளில் நான் பங்குபற்றியுள்ளேன். அங்கே வாதிடும்போது அடிக்கடி உணர்ச்சி வசப்படுவேன். அதுதான் நிகழ்ச்சியை உயிரோட்டமாக ஆக்கும். ஆனால் வரம்பு மீறிய வார்த்தைகளை எந்த மொழியிலும் நான் பேசியதில்லை.

உண்மையை சொல்லப் போனால் எனக்கு தூஷணம் மற்றும் முறைதவறான தமிழ் வார்த்தைகள் தெரியாது. ஆகவே தனிப்பட்ட உரையாடலிலும்கூட என்னிடமிருந்து தூஷணம் வராது.

நான் என்னை இழந்தது ஒருமுறைதான். அது ஒரு தனியார் ஊடக நிகழ்வில் நடந்தது. அதுவும், என்னை பற்றி என்ன கூறப்பட்டிருந்தாலும் நான் சிரித்துக் கொண்டே ரணிலை போன்று நகைச் சுவையாக ஏதாவது பதில் கூறியிருப் பேன்.

அன்று, அந்த ஓர் அரசியல்வாதி நிதானம் இழந்து, சமூகத்தை தரந் தாழ்த்தி பேசியபோது, பலமுறை அந்த சொல்லாடலை வாபஸ் வாங்கச் சொல்லியும் கேட்காததால், அவரை "குளிரவைத்து" அமைதியாக்கினேன். ஆனால், அதுவும்கூட என் மனதை அவ்வப்போது உறுத்தும்.

தற்போது பாராளுமன்றத்தில் இருக்கும், அவரை நோக்கி நட்புடன் எப்போதும் நான் இதற்காகவே புன்முறுவல் புரிகிறேன். நான் விடைபெறும் காலம் தூரமில்லை. எனக்கு பின்னாலே வரும் இளையோர் எம்மை பார்த்து படிக்க ஏதாவது இருக்க வேண்டுமே..!-என்று குறிப்பிட்டுள்ளார்.

# அச்சுவேலி வைத்தியசாலை மருத்துவர் உட்பட ஆறு பேர் தனிமைப்படுத்தலில்!

யாழ்ப்பாணம், ஏப். 13

அச்சுவேலி வைத்தியசாலையில் சிக்சை பெற்ற நபர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் வைத்தியசாலையின் வைத்தியர், தாதி, ஊழியர்கள் நால்வர் உட்பட்ட ஆறு பேர் தனிமைப்பட்டுள்ளனர்.

குறித்த தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் உறுதிப்படுத்தினர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று கடந்தவாரம் வீடு திரும்பியிருந்த நபர் ஒருவர் மீண்டும் நோய் அறிகுறி காணப்பட்ட நிலையில் நேற்று அச்சுவேலி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்றிருக்கின்றார்.

அவருக்கு கொரோனா தொற்று அறிகுறி காணப்பட்டமையை அடுத்து நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு மேற்கொள்ளப் பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்து அவருக்கு சிகிச்சை வழங்கிய அச்சுவேலி வைத்தியசாலை மருத்துவர், தாதி ஊழியர்கள் 04 பேர் என ஆறு பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 5000 ரூபாய்...

தவறானது என அந்தக் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த முடிவு புத்தாண்டு வருவதற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டது என்றும் இது அரசாங்கத்தின் இயலாமையைக் காட்டுகிறது என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

1,000 ரூபாய்க்கு அத்தியாவ சியப் பொருள்களை பெற்றுக்கொள்ளல் உட்பட பல்வேறு தோல்வியுற்ற முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் 5,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கு வதற்கான முடிவு எட்டப்பட்ட நேரத் தில், அரசாங்க விடுமுறை அறிவிக்கப்பட்டது என்றும் நாடு, பொருளாதாரம் அல்லது மக்கள் மீதான அக்கறை குறித்து அதிகாரிகளுக்கு புரிதல் இல்லை என் பதை இந்த முடிவு காட்டுகிறது என்றும் அவர் கூறினார். (எ)

## அரச...

அபயராம விகாரையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்:

அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் இல்லாமலிருந்திருந்தால் பொதுஜன பெரமுன குறுகிய காலத்தில் எழுச்சி பெற்றிருக்காது. பொதுஜன பெரமுனவின் எழுச்சிக்கு அபயராம விகாரை பல வழிமுறைகளில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. அபயராம விகாரை இருக்கிறதா? இல்லையா? என்ப தைக்கூட பொதுஜன பெரமுனவின் ஒரு சில உறுப்பினர்கள் மறந்துவிட்டார்கள்.

முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மாத்திரம் காலத்துக்கு ஏற்றால்போல் மாற்றமடையாமல் உள்ளார். தற்போதைய அரசியல்வாதிகள் இவரிடமிருந்து பல நல்ல விடயங்களை கற்றுக்கொள்ள வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் இலங்கைக்குப் பொறுத்தமற்றது. ஆகையால், மாகாண சபை முறைமையை முழுமையாக இரத்துச் செய்து, உள்ளூராட்சி மன்றங்களைப் பலப்படுத்த வேண்டும். ஆனால், மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதன் பின்னணியில் சர்வதேச நாடுகளும் அழுத்தம் பிரயோகிக்கின்றன.

அரசாங்கம் தொடர்பில் நாட்டு மக்கள் தற்போது கொண்டுள்ள நிலைப்பாட்டை மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். அரசாங்கத்தின் ஒரு சில செயல்பாடுகள் கொள்கைக்கு முரணாகக் காணப்படுகின்றன.தவறுகளைத் திருத்திக் கொண்டு நிர்வாகத்தை சிறந்த முறையில் முன்னெடுக்க அரசு கவனம் செலுத்த வேண்டும்- என்றார்.

## முள்ளிவாய்க்கால்...

முற்றமான முள்ளிவாய்க் காலில் ஒழுங்கமைக்கப்படும் என்ப தைத் தெரிவித்துக் கொள்வ தோடு தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு மகாணங்களிலும் ஏனைய இடங்களிலும் கறுப்புக் கொடியைப் பறக்கவிட்டும், மே 18 அன்று மாலை 6 மணிக்கு ஆலயங்களிலும், கோவில்களிலும் மணி ஒலித்து அக வணக்கம் செலுத்தி, வீடுகளுக்கு முன் விளக்கேற்றி தமிழ்த் தேசிய துக்க நாளை கடைப்பிடிக்கும் படி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பினர் கேட்டு நிற்கின்றனர்.

முள்ளிவாய்க்கால் அனுபவத்தை அடுத்த தலைமுறைக்கு கடத்துவதற்காக மே 18 அன்று முள்ளிவாய்க்கால் கஞ்சியை பரிமாறுவதோடு, தமிழினப் படுகொலைக்கு நீதி வேண்டிய பயணத்தில் வேறுபாடுகளைக் களைந்து, 'ஈழத் தமிழ்த்தன்மையில்' ஒன்றிணைந்து முள்ளிவாய்க்கால் மையத்தில் மக்கள் இயக்கமாதலின் அவசியத்தையும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பினர் வேண்டி நிற்கின்றனர்.

தயவு செய்து தாயகத்தில் ஒருங்கிணைக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்காக உள்ளூரிலும், புலம்பெயர் தேசத்திலும் நிதி சேகரிப்பில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு விநயமாக வேண்டி நிற்கின்றனர் - என்றுள்ளது.

## போலிப்...

சட்டக் கோவை ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளது எனத் தெரியவருகின்றது.

இந்த வாரம் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சமூகங்களுக்கு இடையே குரோதத்தை ஏற்படுத்தும் மற்றும் வெறுப் புணர்வுகளைத் தூண்டும் வகையிலான பிரசாரங்களை முன்னெடுத்தல், இரு நாடுகளுக்கு இடையிலான உடன்படிக்கைகள் மற்றும் நட்புறவுச் செயற்பாடுகள் குறித்து பொய்யான பிரசாரங்களைப் பரப்புதல், இனவாத, மதவாத கருத்துக்களைப் பரப்புதல், நிதி விடயங்களில் பொய்யான கருத்துக்களைப் பரப்புதல் உள்ளிட்ட விடயங்களில் கட்டுபாடுகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனக் கூறப்படுகின்றது.

## டில்லிக்கு...

தெற்கு ஆபிரிக்க நாடுகள் ஆகியவற்றில் செயல்படும் இந்த பயங்கரவாதிகள் இலங்கையில் நடமாடுவது அதிகரித்துள்ளது.

மேலும் சர்வதேச போதைமருந்து கும்பலும் இலங்கையை போதைப் பொருட்கள் கடத்தும் மையமாக வைத்து இருக்க முயற்சிக்கிறார்கள்.

இதை முறியடிக்க இலங்கையில் போதிய படை பலம், புலனாய்வு அமைப்புகள் இல்லை. இதற்கு இந்தியா போன்ற பெரிய நாடுகளுடைய உதவி இருந்தால்தான் முடியும். அதிலும் பக்கத்து நாடான இந்தியாவால்தான் இதற்கு உதவ முடியும்.

எனவே, இதற்கான ஒத்துழைப்பை வழங்கும்படி இந்தியாவிடம் கேட்டுக் கொள்வதற்காக கோட்டாபய ராஜபக்ஷ இந்தியா வர உள்ளார் என அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடந்தது!

புதிதாக கல்யாணமான ஒரு கணவனும் மனைவியும் புதிய வீடொன்றிற்கு குடியேறினார்கள்.

அடுத்த நாள் காலையில் இருவரும் ஹோலில் அமர்ந்து தேநீர் குடிக்கும் போது, எதிர்வீட்டு பெண் துணிகளை தோய்த்து காயப்போட்டுக்கொண்டிருப்பது ஜன்னல் வழியாக தெரிந்தது. அதை பார்த்த மனைவி, கணவனிடம் சொன்னாள், "அங்க பாருங்க, அந்த பெண்ணுக்கு உடுப்புத் தோய்க்கவே தெரியேல்லை. துணியெல்லாம் கறுப்பு புள்ளிகளா இருக்கு".

ஜன்னல் வழியே பார்த்த கணவன் ஒன்றுமே சொல்லாமல் நகர்ந்துசென்றான்.

பக்கத்துக்கு வீட்டு பெண் தினமும் தோய்த்த உடுப்புக்களை காயப் போடுவதும், அதை ஜன்னல் வழியாக பாத்து இந்த மனைவி அவளுக்கு தோய்க்க தெரியவில்லை என்று சொல்வதும், கணவன் அதுக்கு ஒன்றுமே சொல்லாமல் இருந்துவிடுவதும் தொடர்ந்து கொண்டே இருந்தது.

திடீரென்று ஒரு நாள் மனைவி ஆச்சரியமாக சொன்னாள்: 'இங்க பாருங்க! கடைசியில நம்ம எதிர் வீட்டு பெண் துணிகளை தோய்க்க படிச்சிட்டாள். இண்டைக்குத்தான் துணிகள் எல்லாம் சுத்தமா தோய்த்திருக்கிறார்.'

அதுக்கு அந்த கணவன் சொன்னான், 'அது வேற ஒன்றும் இல்லை. இன்றைக்கு காலையில சீக்கிரமா எழும்பி நம்ம வீட்டு ஜன்னல் கண்ணாடிகளை எல்லாம் நான் துடைச்சிட்டன்.'

அடுத்தவனின் குறைகளை நாம் நினைப்பது சில நேரங்களில் நமது பார்வை பிரச்னையாக கூட இருக்கலாம்.!

நமது அரசியல் விமர்சகர்கள், ஊடகக்காரர்களின் அரசியல் விமர்சனங்களைப் படிக்கின்றபோது இந்தக் கதைதான் ஞாபகத்திற்கு வருவதுண்டு. அதற்காக இந்த ஊர்க்குருவி எழுதுவது எல்லாம் சரி என்றும் வாதிடப்போவதில்லை.

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய நமது பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், கொழும்பு பேராயர், கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை சிங்கள கத்தோலிக்கர்களுக்கான ஆண்டகையா என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக அண்மைக்காலமாக கடும் தொனியில் விமர்சித்துவரும் ஆண்டகை, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்றால், சர்வதேசத்தின் கதவுகளை தட்டப்போவதாகவும் அச்சுறுத்தி வருகிறார். இதனால், கோபம் கொண்ட சிறிதரன், ஆண்டகை அவர்கள் மீது சினம்கொள்வது ஏன் என்று புரியவில்லை.

ஆண்டகை பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டித்தான் போராடுகிறார். ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் தனியாக சிங்கள கிறிஸ்தவர்கள் அல்ல. கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தில் பாதிக்கப்பட்டவர்கள் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் தமிழ் கத்தோலிக்கர்கள். மட்டக்களப்பில் பாதிக்கப்பட்டவர்கள் முழுவருமே தமிழர்கள். இப்படியிருக்க, சிங்கள கிறிஸ்தவர்களுக்கான ஆண்டகையா என்று என்ன கணக்கில் சிறிதரன் கேள்வி எழுப்பினாரோ தெரியவில்லை.

முள்ளிவாய்க்காலில் தமிழர்கள் கொல்லப்பட்டபோது கர்தினால் குரல்கொடுக்கவில்லை என்பதும் சிறிதரனின் ஆதங்கம். ஆனால், இதற்கு முன்னதாக ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது சிங்கள இளைஞர்களும் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். அப்போதும் இந்த ஆயர் வாய்திறக்கவில்லைத்தான். அவரைப் பொறுத்தவரை தனது மதத்தவர்களை இலக்குவைத்து நடத்தப்பட்ட தாக்குதலுக்கு நீதி கேட்கிறார் அவ்வளவுதான். அதற்காக அவருடன் ஏன் நாம் மல்லுக்கட்ட வேண்டும் என்பது சிறிதரனுக்குத்தான் வெளிச்சம்.

ஆனால், சில வாரங்களுக்கு முன்னனர், இந்த விடயம் குறித்து உரையாற்றிய சுமந்திரன், உள்நாட்டில் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு இரண்டு ஆண்டுகளிலேயே வந்துவிட்டது, ஆனால் நாம் பன்னிரண்டு ஆண்டுகளாக அதற்காக போராடிக்கொண்டிருக்கிறோம் என்றார். அதாவது கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் கோரிக்கையை எமக்கு சாதகமான முறையில் பயன்படுத்தினார் அவர். ஆனால், சிறிதரன் அதற்காக அவர் மீது கோபப்படுகிறார்.

அதைவிட கொடுமையானது, இந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கேட்டு சில வாரங்களுக்கு முன்னர், கர்தினால் அவர்கள் கறுப்பு ஞாயிறு வாரம் என்று போராட்டத்தை நடத்தினார். அந்தப் போராட்டத்திற்கு நாடுமுழுவதுமுள்ள மக்கள், பாரிய ஆதரவை வழங்கிய போதிலும், வடக்கு - கிழக்கில் கிறிஸ்தவர்கள் அதனைக் கண்டுகொள்ளவே இல்லை. ஏன் இந்த சிறிதரனும்தான். ஆனால் நம்மைப்பற்றி அவர் கண்டுகொள்ளவேண்டும் என்ற எதிர்பார்ப்பு மட்டுமே நம்மிடமுண்டு.

ஊர்க்கு

# பிலவ வருட தமிழ் புத்தாண்டு 2021



எமது சமய விழுமிய வரையறைகளுடன் கலந்த பாரம்பரிய வருடப்பிறப்பான தமிழ்ப் புத்தாண்டு எனப்படும் சித்திரை வருடப்பிறப்பு அறுபது வருடச் சுற்றின் 35 ஆவது வருஷமாகிய பிலவ வருடம் இன்று நள்ளிரவுக்குப் பின்னர் பிறக்கின்றது.

வாக்கியப் பஞ்சாங்கத்தின் படி, 14ஆம் திகதி புதன் கிழமை அதிகாலை 01மணி 39 நிமிடத்தில் பிறக்கிறது.

திருக்கணித பஞ்சாங்கத்தின் படி 14ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 02 மணி 31 நிமிடத்திலும் பிறக்கிறது.

**மருத்து நீர்**

விஷுபுண்ணிய காலம் (மருத்துநீர் வைக்கும் நேரம் வாக்கியப் பஞ்சாங்கத்தின் படி, 13ஆம் திகதி இரவு 09.39 முதல் அதிகாலை 05.39 வரையும், திருக்கணித பஞ்சாங்கத்தின் படி 13ஆம் திகதி இரவு 10.33 முதல் அதிகாலை 06.33வரையும்!

**அணிய வேண்டிய புத்தாடை வர்ணம் :**

சிவப்பு அல்லது நீலம்.

**கைவிஷேடம் கொடுத்து வாங்கும் நேரம்:**

(வாக்கிய பஞ்சாங்கப்படி) 14.04.2021 புதன் காலை 09.09 முதல் 09.52 வரை. பிற்பகல் 02.22 முதல் 4.11 வரை

**நாள் வியாபாரம் புதுக்கணக்கு ஆரம்பித்தல்:**

பொது நேரம் 14.04.2021 புதன் காலை 11.36 முதல் 12.01. வரை 22.04.2021 வியாழன் பிற்பகல் 3.05 முதல் 3.38 வரை

**உலக நாடுகளில் புதுவருடம்**

- 13.09.2021 செவ்வாய் பிற்பகல் 03 மணி 09 நிமிடம் ( கனடா, அமெரிக்க நாடுகளில் நேரப்படி வருடப்பிறப்பு)
- 13.09.2021 செவ்வாய் இரவு 9 மணி 09 நிமிடம் ( லண்டன் நேரப்படி வருடப் பிறப்பு )
- 14.09.2021 புதன் காலை 6 மணி 09 நிமிடம் ( அவுஸ்திரேலியா நேரப்படி வருடப்பிறப்பு)
- 13.09.2021 செவ்வாய் இரவு 10 மணி 9 நிமிடம் (ஐரோப்பிய நாடுகளின் நேரப்படி வருடப்பிறப்பு)

# பண சலவை மோசடியின் மையமாக கொழும்பு துறைமுக நகரம் மாறும்!

கொழும்பு, ஏப். 13

சீனாவின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படும் கொழும்பு துறைமுக நகரம் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் 'பணச் சலவை' மோசடியின் புகலிடமாக மாறும் அபாயம் உள்ளது என்று அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் எச்சரித்துள்ளார்.



துறைமுக நகரத்தின் நெகிழ்வுத் தன்மையான வர்த்தக விதிகளை மோசமான சக்திகள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்புத் துறைமுக ஆணைக்குழு வரைவில் குறிப்பிடப்பட்டுள்ள வரிச் சலுகைகள், வரி அற்ற சம்பள முறைகள் மற்றும் வெளிநாட்டு நிதியை அனுமதிக்கும் ஒழுங்குகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் இதனைக் கூறியுள்ளார்.

துறைமுக நகரம் தொடர்பான சட்டங்கள் அதன் பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களை மிகக் கவனமாகப் பார்க்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத மற்றும் பண மோசடியில் ஈடுபடுபவர்கள் இந்த வணிகச் சூழலைப் பயன்படுத்தி, மோசமான நடவடிக்கைகளுக்கான புகலிடமாக அமைத்துக்கொள்ளும் அபாயம் இருக்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்படி நிலைமைகளைத் தடுக்கும் விதமான சட்ட ஏற்பாடுகள் அவசியம் எனவும் அலெய்னா டெப்லிட்ஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# தேசியப்பட்டியல் மூலம் ரஞ்சனை மீண்டும் எம்.பி. ஆக்க திட்டம்?

## பதவி துறக்கத் தயாராகின்றார் ஹரின் பெர்னான்டோ



கொழும்பு, ஏப் 13

மே மாதம் முதலாவது அமர்வில் தான், ரஞ்சன் ராமநாயக்கவுக்காக அரசியல் தீர்மானம் ஒன்றை எடுக்க வுள்ளதாகத் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னான்டோ, தான் அரசாங்கத்துக்கு சவால் விடுப்பதாகவும் அரசாங்கம் அதனை நிறைவேற்றினால் தான் மீண்டும் இந்த நாட்டு மக்களுக்கு தனது முதுகெலும்பை காட்டுவதாகவும் தெரிவித்துள்ளார்.

மே மாதம் கூடவுள்ள பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வின் போது, ஹரின் பெர்னான்டோவால் விசேட அறிவிப்பொன்று விடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் தகவல்களுக்கமைய ரஞ்சன் ராமநாயக்க மீண்டும் பாராளுமன்றம் வருவதற்காக, தனது தேசியப் பட்டியல் ஆசனத்தை தியாகம் செய்யவுள்ளாரென்று தகவல்கள் தெரிவித்துள்ளன.




**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
13.04.2021 செவ்வாய்க்கிழமை
சார்வரி, பங்குனி 31

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# கேள்விக்குள்ளாகும் சமூக பாதுகாப்பு

தென்மராட்சி பகுதியில் வயோதிபர் ஒருவர் கொலை செய்யப்பட்டார். திருடும் நோக்கிலேயே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தில் அவ்வப்போது கொள்ளைச் சம்பவங்கள், வாள்வெட்டு சம்பவங்கள், வழிப்பறி மற்றும் குடும்பத் தகராறுக்காக சினிமா பாணியிலான தாக்குதல்கள் - என, பல சம்பவங்கள் செய்திகளாகிக் கொண்டிருக்கின்றன. ஒருபுறம் தமிழர்களுக்கான உரிமை தொடர்பில் அரசியல்வாதிகளும் சிவில் சமூகத் தலைவர்களும் பேசிக்கொண்டிருக்கின்றபோது, யாழ். சமூகம் உள்ளுக்குள் சிதைந்துகொண்டிருக்கின்றதா என்னும் கேள்வி எழுகின்றது. இது தொடர்பில் நாம் கரிசனை கொள்ளவேண்டியதில்லையா?

எந்த சமூகத்தின் இருப்பு தொடர்பிலும், அதன் தனித்துவம் தொடர்பிலும் நாம் குரலெழுப்புகின்றோமோ, அந்த சமூகத்தின் உள்ளார்ந்த விடயங்களிலும் தமிழ் சமூகத்தின் முன்னேறிய பிரிவினர் அக்கறையை காண்பிக்கவேண்டும். யுத்த காலத்தில்கூட இடம்பெற்றிராத சம்பவங்கள் இப்போது ஏன் அதிகளவில் இட்பெறுகின்றன? அண்மையில், காதல் திருமண விவகாரம் தொடர்பில், யாழ்ப்பாணத்திலிருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாள்வெட்டு குழுவொன்று, வவுனியா வரையில் சென்று தாக்குதலை மேற்கொண்டிருக்கின்றது. குடும்ப ரீதியான விடயங்களைக்கூட, வாடகைக் குழுக்களின் ஊடாக கையாளும் நிலைமை உருவாகி வருகின்றது என்பதையே மேற்படி சம்பவம் காண்பிக்கின்றது. இந்த விடயங்களை ஒரு சமூகம் முளையிலேயே கிள்ளியெறியாது விட்டால், இவ்வாறான சம்பவங்களை ஒரு சாதாரண விடயமாக ஏற்றுக்கொண்டுவிடும் ஆபத்து நேரிடலாம்.

ஒரு சமூகத்தின் பாதுகாப்பிற்கு காவல் துறையினரே பொறுப்பென்றாலும், சமூகத்தின் முன்னேறிய பிரிவினரான மதத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், கல்விமான்கள் ஆகியோர் சமூகத்தின் பாதுகாப்பு தொடர்பில் கரிசனையை காண்பிக்கவேண்டும். சமூகத்தை ஒழுங்குபடுத்துவதில் மதத்தலைவர்கள், சிவில் சமூக அமைப்புக்களுக்கு முதன்மையான பங்குண்டு. சிவில் சமூகமென்றால் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வது, அரசியல் கோஷங்களை முன்வைப்பது மட்டும் அவற்றின் பணியல்ல. தாங்கள் வாழும் சமூகம் உள்ளார்ந்து சிதைந்துபோகாது, சமூகத்தை நெறிப்படுத்துவதிலும் சிவில் சமூகத்தினர் தங்களின் அர்ப்பணிப்புமிக்க ஈடுபாட்டை காண்பிக்க வேண்டும்.

ஒரு சமூகம் உள்ளுக்குள் சிதைந்துகொண்டிருக்குமானால், அவ்வாறான சமூகத்திற்கு அதிகாரங்கள் கிடைத்தாலும் அந்த சமூகத்தினால் முன்னோக்கி பயணிக்க முடியாது. வடக்கு, கிழக்கை பொதுவாக அவதானித்தால், அரசியல் ரீதியில் செயற்படுவபவர்களும், அரசியல் தலைவர்களும் அதிகமாக நிலைகொண்டிருக்கும் யாழ்.சமூகத்திற்குள்தான் இவ்வாறான விடயங்கள் அதிகமாக இடம்பெறுகின்றன. ஆனால், சமூகத்தின் பாதுகாப்பு தொடர்பில் இந்த தலைவர்கள் அக்கறைப்படுவதாக தெரியவில்லை.

எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தை நோக்கி விரல்நீட்டுவது மட்டும் தீர்வாகிவிடாது. இதுபோன்ற சம்பவங்களை எவரோ திட்டமிட்டு தமிழ் சமூகத்தின்மீது திணிக்கின்றனர் - என்று கூறுவதும் சரியானதொரு பார்வையல்ல. சமூகத்தின் இயங்கு சக்திகளான அரசியல் தலைவர்கள், மதத்தலைவர்கள், சிவில் சமூக தலைவர்கள், கல்விமான்கள் என்போரை மீறி, அந்நியர்கள் எந்தவொரு விடயத்தையும் ஒரு சமூகத்தின் மீது உட்புகுத்திவிடமுடியாது.

எனவே, சமூக பாதுகாப்பு தொடர்பில் சட்டம் ஒழுங்கிற்கு பொறுப்பானவர்களுடன் கலந்துரையாடி உரிய முன்னேற்பாடுகளை எடுப்பதுடன், முடிந்தவரை குற்றச் செயல்களை தடுப்பதற்கான ஒன்றிணைந்த கூட்டு வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவேண்டியதும், அவசியமான ஒன்றாகும். தமிழ் மக்களின் உரிமை, நீதி தொடர்பான விடயங்களில் எந்தளவிற்கு அக்கறையுடன் செயற்படுகின்றோமா, அந்தளவிற்கு தமிழ் சமூகம் உள்ளுக்குள் சிதைந்து செல்வதை தடுப்பதற்கான பொறிமுறைகள் தொடர்பில் சிந்திக்கவேண்டியதும், செயலாற்றவேண்டியதும் நம் அனைவரதும் கடமையாகும்.

# வடக்கு - கிழக்கு மக்கள் விழிப்புடனிருக்கவேண்டிய நிர்ப்பந்தம்

- அலசுவது இராஜதந்திரி -



இன்றைய ஆட்சி ஆட்டங்காண ஆரம்பித்துள்ளமைக்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ள தருணத்திலேயே யாழ்ப்பாண மேயர் வி. மணிவண்ணன்மீது அவரது புதிய நகர பாதுகாப்பு பிரிவுக்கான சீருடை குறித்த சர்ச்சை ஏற்பட்டதோடு, சாதாரண பொலிஸ் விசாரணையின்றி பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாரின் விசாரணைக்கு அவர் உட்படுத்தப்பட்டிருந்தார்.

ஏதிர்க்கட்சிதலைவர் சஜித் பிரேமதாஸ யாழ்ப்பாண மேயர் வி. மணிவண்ணனின் கைது மற்றும் அவர்மீதான பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் விசாரணை என்பவை குறித்து மிகத்துல்லியமான கருத்தை வெளியிட்டுள்ளார். தென்னிலங்கையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்பற்றி வெளிப்பட ஆரம்பித்துள்ள அரசுக்கெதிரான எதிர்ப்பலை, இதுதவிர அரசுக்குள் நிலவும் பங்காளிக் கட்சிக்களுக்கிடையிலான குழப்ப நிலை போன்றவற்றின்மீதான முழுநாட்டினது கவனத்தையும் திசைதிருப்பவே யாழ்ப்பாண மேயர்மீது பயங்கரவாத தடுப்புச்சட்ட பிரிவினால் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

**பங்காளிக் கட்சிகள்**

இந்த ஆண்டு இடம்பெறவுள்ள மே தினத்தை அரசாங்கத்துடன் சேர்ந்து நடத்துவதா அல்லது தனித்தனியாக நடத்துவதா? என்பது பற்றி அரசில் அங்கம் பெறுகின்ற பங்காளிக்கட்சிகள் ஆராய்ந்து வருகின்றன. அத்துடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசில் அங்கம் பெறுகின்ற பங்காளிக்கட்சிகளின் ஆலோசனைகளைப் பெறுவதைவிட, இராணுவ பின்னணி கொண்டோரின் ஆலோசனைகளை பெறுவதோடல்லாமல் இராணுவ பின்னணி கொண்டோரே முக்கிய அரச பதவிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டும் நிலவிவருகிறது.

அண்மையில் இலங்கைமீது கொண்டு வரப்பட்ட ஜெனிவா பிரேரணைகூட இலங்கைக்கு கிடைத்த இராஜதந்திர ரீதியான தோல்வி என்றே எதிர்கட்சித் தலைவர் அண்மையில் குறிப்பிட்டிருந்தர். தகுந்த அனுபவம்மிக்க இராஜதந்திரிகள் ஜெனிவா விவகாரத்தை கையாளவில்லை எனவும், இதன்காரணமாகவே இலங்கை ஜெனிவாவில் தோல்வியைத் தழுவியதாகவும் எதிர்கட்சித் தலைவர் குறிப்பிட்டிருந்தார். இதற்கு உதாரணமாக, அரசியல் மற்றும் இராஜதந்திர ரீதியான அனுபவமற்ற முன்னாள் கடற்படை தளபதியான அட்மிரல் ஜயநாத் கொலம்பகே வெளிவிவகார அமைச்சு செயலாளராக இருப்பதையும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

**ஆழ ஊடுருவும் முயற்சி**

அரசின் அண்மைக்கால நடவடிக்கைகளை எடுத்து நோக்கும் பட்சத்தில், வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் ஏதோ ஒருவிதத்தில் ஆழ உடுருவ முயற்சிப்பதையே அவதானிக்க முடிகின்றது. இதன்காரணமாகவே யுத்த பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்குரிய மனிதாபிமான உதவிகள் குறித்து கவனஞ் செலுத்துவதைவிட, வடக்கு-கிழக்கில் அகழ்வாரய்ச்சி என்ற போர்வையில் பாரம்பரிய நிலங்களை அபகரிக்கும் நடவடிக்கைகள் மற்றும் புதிய இராணுவ முகாம்களை நிறுவும் நடவடிக்கைகளுக்கு நில அபகரிப்பு போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

வடக்கு-கிழக்கு மாகாணங்களை பொறுத்தவரை சட்டம், ஒழுங்கு என்பவை 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் நல்ல முறையில் கட்டியெழுப்பப்பட்டிருந்தன. மூன்று தசாப்தகால யுத்தத்தினால் வடக்கு-கிழக்கு மக்களே சகல விதத்திலும் பாதிக்கப்பட்டிருந்தனர். ஒருபுறம் அரச படையினரின் கெடுபிடிகள் மறுபுறம் தமிழீழ விடுதலைப் புலிகளது கெடுபிடிகள் என, மோசமான பாதிப்புகளுக்கு மக்கள் முகங்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியிருந்தனர். ஒரு ஜனநாயக ரீதியான அரசியல் நிர்வாக முறை தமக்கு ஏற்படவேண்டுமென வடக்கு-கிக்கு மக்கள் ஏக்கத்தை வெளிப்படுத்திய நியைில், யுத்தம் முடிவுக்குவந்த பின்னர் வடக்கு - கிழக்கில் நடத்தப்பட்ட அனைத்து தேர்தல்களிலும் மக்கள் மிக ஆர்வத்தோடு பங்குபற்றியதையும் காண முடிந்தது.

எனவே, ஜனநாயக ரீதியாக இயங்கும் ஒரு முக்கிய உள்ளூராட்சி நிறுவனமாக யாழ்ப்பாண மாநகரசபை விளங்குகின்றது. ஆட்சியாளர்கள், தற்போதைய யாழ்ப்பாண மேயர் மணிவண்ணனின் உத்தேச மாநகர காவல் பிரிவு சம்பந்தமாக அவரை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் விசரித்துள்ளனர். ஆனால், அல்பிரட் துரையப்பா முதல் ஏறத்தாழ நான்கு யாழ்ப்பாண மேயர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர். யாழ்ப்பாண மேயர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளது கொலை வெறித் தாக்குதல்களுக்கு இரையாகியதே வரலாறாக இருக்கும்போது, இன்றைய யாழ்ப் பாண மேயர் மணிவண்ணனுக்கு அரசு புலிச் சாயம் பூசி, அவரை சங்கடத்திலாழ்த்த முனை வது வடக்கு-கிழக்கு மக்கள் ஜனநாயக நடைமுறைகளில் நம்பிக்கை வைக்க முனைவதை தவிடுபொடியாக்குவதாகவே இருக்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 13 செவ்வாய்க்கிழமை
சார்வரி வருடம் - பங்குனி - 31
நல்ல நேரம் : 07.00 - 09.00
ராகு காலம் : 03.00 - 4.30
திதி : திருதியை




13.04.2021

**மேடம்**
நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும் நாள். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்திணைவர். பூர்வீகசொத்து தகராறுகள் அகலும்.

**இடபம்**
ஒளிமயமான வாழ்க்கைக்கு உறுதுணை புரியும் நாள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். கட்டிடம் கட்டும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்**
இலாபகரமான நாள். அன்னியதேசத் தொடர்பு அனுகூலம் தரும். வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். உத்தியோகத்தில் உயர்ந்த நிலையடையும் சந்தர்ப்பம் கைகூடிவரும்.

**கடகம்**
நட்பால் நல்ல காரியம் நடைபெறும் நாள். ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை எடுத்துக் கொள்வீர்கள். தொலைதூரத்திலிருந்து வரும் செய்தி தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**சிம்மம்**
பிறரை விமர்ச்சிப்பதால் பிரச்னைகள் ஏற்படும் நாள். நட்பு பகையாகலாம். மறதியால் அவதிகளுக்கு ஆட்பட நேரிடும். குடும்பத்தில் பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**கன்னி**
வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள். மதியத்திற்கு மேல் மனக்குழப்பம் ஏற்படும். ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.

**துலாம்**
சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும் நாள். பிள்ளைகள் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். அஞ்சல்வழித் தகவல் அனுகூலம் தரும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

**விருட்சிகம்**
பொதுவாழ்வில் புகழ் கூடும்நாள். பொருளாதார நிலை உயரும். புதிய பணியாளர்களைச் சோப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில்வளர்ச்சிக்கு மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**தனுசு**
நல்லதகவல் இல்லம் தேடி வரும் நாள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். தனவரவு தாராளமாக இருக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவீர்கள்.

**மகரம்**
நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள். நேற்றைய பிரச்னை இன்று நல்ல முடிவிற்கு வரும். இடம், பூமி விற்பனையால் லாபம் கிடைக்கும்.

**கும்பம்**
விரயங்கள் குறைய விழிப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டிய நாள். பொதுநலத்தால் புகழ் கூடும். இடமற்றம், ஊர் மாற்றம் செய்யும் எண்ணம் அதிகரிக்கும். உடன்பிறப்புகளால் விரயம் உண்டு.

**மீனம்**
எதிரிகள் உதிரியாகும் நாள். எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள். இனத்தார் பகை மாறும். தேக ஆரோக்கியம் சீராகும். பழைய கடன் பாக்கிகளை நாசூக்காகப் பேசி வசூலிப்பீர்கள்.

# தமிழகத்தில் 17 லட்சம் ‘டோஸ்’ கையிருப்பு

சென்னை, ஏப். 13

தமிழகத்தில் தடுப்பூசிக்கு எந்த தட்டுப்பாடும் இல்லை என்றும், 17 லட்சம் தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளதாகவும் பொது சுகாதாரத்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில், நாளுக்கு நாள் கொரோனா தொற்று அதிகரித்து வருவதால், தடுப்பூசி போட்டுக் கொள்ள விரும்புவோர் எண்ணிக்கையும் கூடியுள்ளது. தமிழகத்தில் இது வரை, 38 லட்சம் பேருக்கு, கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இதற்கிடையே கொரோனா பரவல் அதிகரிப்பதால், அனைவருக்கும் தடுப்பூசி போட வேண்டும் அதற்கான வயது வரம்பை குறைக்க வேண்டும் என, பல மாநில முதல்வர்கள் வலியுறுத்தியுள்ளனர். அத்துடன், இந்திய மருத்துவ சங்கமும், 18 வயது நிரம்பிய அனைவருக்கும் தடுப்பூசி போட வேண்டும் என்று, மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளது. அதனால், நான்கு நாட்கள் தடுப்பூசி திருவிழாவை மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்த திருவிழா, தமிழகத்தில் 2 ஆயிரம் மினி கிளினிக் உட்பட, 5 ஆயிரம் மையங்களில் நேற்று முன் தினம் தொடங்கியது. மக்கள் ஆர்வமுடன் சென்று, தடுப்பூசி போட்டுக் கொண்டனர். தினமும், இரண்டு லட்சம் பேருக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த தடுப்பூசி விழா, 14ஆம் திகதி வரை நடக்கிறது. இதில், 45 வயதுக்கு மேற்பட்டோர் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம்.

தமிழகத்தில் தடுப்பூசிக்கு எந்த தட்டுப்பாடும் இல்லை. 17 லட்சம் தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளன என, பொது சுகாதாரத்துறை இயக்குநர் செல்வ விநாயகம் தெரிவித்துள்ளார்.

# தமிழக அமைச்சரவையில் இடம்பிடிக்குமா காங்கிரஸ்?



சென்னை, ஏப். 13

“தமிழக சட்டசபை தேர்தலில், தி.மு.க., வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால், கண்டிப்பாக அமைச்சரவையில் இடம் கேட்கவேண்டும்“ என, ராகுலிடம் கோரிக்கை வைத்துள்ளனர், தமிழக காங்கிரஸார்.

“காங்கிரஸ் ஆதரவுடன், தி.மு.க., ஆட்சி நடந்தபோது, அமைச்சரவையில் நமக்கு இடம் கிடைக்கவில்லை. “இந்த முறை விடக் கூடாது குறைந்தது இரண்டு அமைச்சர்களுக்கான இடங்களை கேட்டு வாங்கி விட வேண்டும்“ என, கூறி வருகின்றனர்.

# ஸ்டாலின் மருமகன் சபரீசனுக்கு பிரச்னை!



சென்னை, ஏப். 13

தேர்தலுக்கு ஒரு சில நாட்களுக்கு முன், தி.மு.க., தலைவர் ஸ்டாலின் மருமகன் சபரீசன் வீட்டில் வருமான வரித் துறை சோதனை நடந்தது. இதில் எதுவுமே சிக்கவில்லை என, தி.மு.க.வினர் மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.

ஆனால், சோதனை முடிந்ததும், எட்டு பக்க இரகசிய அறிக்கையை வருமான வரித்துறையின் தலைவருக்கு அனுப்பியுள்ளார், தமிழக சீனியர் வருமான வரித் துறை அதிகாரி. அதில் பல முக்கியமான விஷடயங்கள் இடம் பெற்றுள்ளன. இந்த அறிக்கையை படித்த மத்திய வருவாய்த் துறை செயலர், ஒரு இரகசிய குறிப்பை எழுதி பிரதமருக்கும், நிதி அமைச்சருக்கும் அனுப்பியுள்ளார்.

அந்த அறிக்கையில், “சபரீசன், டுபாயில் யாருடன் அடிக்கடி தொடர்பில் உள்ளார் என்பது குறித்து விசாரணை தேவை“ என சொல்லப்பட்டுள்ளதாம். “தமிழக தேர்தல் முடிவுகள் வெளியான பின், சபரீசனுக்கு பிரச்னைதான்” என்கின்றனர் அதிகாரிகள்.

(அ)

# ஊரடங்கு வருமா? தமிழக முதல்வர் ஆலோசனை!






சென்னை, ஏப். 13

தமிழகத்தில் கொரோனா பரவல் அதிகரித்து வரும் நிலையில் முதல்வர் எடப்பாடி பழனிசாமி அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

கடந்த ஆண்டு கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. பலத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதன் காரணமாக அனைத்து தரப்பு மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அதுபோன்று தமிழக பொருளாதாரமும் பெரிய அளவு இழப்பைச் சந்தித்தது.

இதைத் தொடர்ந்து படிப்படியாக ஊரடங்கு தளர்வு அளிக்கப்பட்ட நிலையில் தற்போது மீண்டும், வைரஸ் பாதிப்பு அதிகரித்து வருகிறது.

இதனால் ஏப்ரல் 10ஆம் திகதி முதல், திரையரங்குகள் 50 சதவிகித பார்வையாளர்களுடன் இயங்க அனுமதி உள்ளிட்ட கட்டுப்பாடுகள் அமலுக்கு வந்தன.

இந்நிலையில் முதல்வர் எடப்பாடி பழனிசாமி நேற்று பிற்பகல் 12 மணியளவில், கொரோனா கட்டுப்பாடுகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார். தலைமைச் செயலாளர், அமைச்சர்கள் மற்றும் சுகாதாரத் துறையினருடன் ஆலோசனை நடந்தது.

இதில் முழு ஊரடங்கு அமுல்படுத்தலாமா அல்லது இரவு நேர ஊரடங்கு அமல்படுத்தலாமா என்பது குறித்தும், வணிக வளாகங்கள், திரையரங்குகளுக்குக் கூடுதல் கட்டுப்பாடு விதிக்கலாமா, டாஸ்மாக் இயங்கும் நேரத்தைக் குறைக்கலாமா என்பது குறித்தும் ஆலோசனை நடந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதுபோன்று மாவட்டம் விட்டு மாவட்டம் செல்வதற்கும் இ.பாஸ் கட்டாயப்படுத்துவது தொடர்பாகவும் , பொருளாதார பாதிப்பு ஏற்படாத வண்ணம் கட்டுப்பாடுகள் கொண்டு வரப்படும் என்றும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளுப்பிட்டியில் சிக்கின சீன மதுபானப் போத்தல்கள்!



கொழும்பு, ஏப். 13

கொள்ளுப்பிட்டி - எல்ப்ரட் ஹவுஸ் வீதியில் சீன உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையமொன்றிலிருந்து, சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தொகை சீன மதுபான போத்தல்கள் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் இரவு 7.30 மணியளவில் கொள்ளுப்பிட்டி பொலிஸாரின் குற்றப் புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது அனுமதிப் பத்திரமின்றி இறக்குமதி செய்யப்பட்டட 656 சீன மதுபான போத்தல்கள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் குறித்த வர்த்தக நிலையத்திலிருந்து கடந்த வாரம் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தொகை சிகரெட்டுகள் மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கசிப்பு போன்றவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவம் தொடர்பாக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# ஆளுநங்கூட்டணிக்குள் இழுபறி வலுத்தது!

## மஹிந்த தலைமையில் சந்திக்க ஏற்பாடு

கொழும்பு, ஏப்.13

**ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் எதிர்வரும் 19ஆம் திகதி முக்கியத்துவமிக்க சந்திப்பு நடைபெறவுள்ளது.**

இந்தச் சந்திப்பின்போது எட்டப்படும் தீர்மானத்தின் அடிப்படையிலேயே கூட்டணியின் தலைவிதி நிர்ணயிக்கப்படும் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அரசில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சி உட்பட 11 கட்சிகள் இணைந்து மே தின நிகழ்வைத் தனியாகவும், ஆளுங் கூட்டணியின் பிரதான பங்காளியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தனிமாகவும் மேதின நிகழ்வுகளை நடத்துவதற்கு தயாராகி வருகின்றமை ஆளுந்தரப்புக்குள் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதேபோல் மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பில் ஆளுந்தரப்பால் முன்வைக்கப் பட்ட புதிய யோசனைக்கு 11 பங்காளிகளும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஆளுங்கட்சியின் பங்காளிகளைப் பிரதமர் சந்திக்கின்றார். கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளுக்கு இதன்போது முடிவு கட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# பாடசாலை விடுமுறையில் அதிரடி மாற்றம்

கொழும்பு, ஏப்.13

ஏப்ரல் 19 ஆம் திகதியன்று பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டதும் எதிர்வரும் ஒகஸ்ட் மற்றும் டிசெம்பர் மாத பாடசாலை விடுமுறைக் காலங்களில் மாற்றங்கள் ஏற்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் ஒகஸ்ட் மாதத்தில் நடத்த உத்தேசிக்கப் பட்டிருந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சை மற்றும் 5 ஆம் தரத்துக்கான புலமைப்பரிசில் பரீட்சை என்பன எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனால், ஒகஸ்ட் மாத பாடசாலை விடுமுறையை ஒக் ரோபர் மாதத்தில் வழங்குவது குறித்து கலந்துரையாடப்பட்டு வருகிறது.

மேலும், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை அடுத்தாண்டு ஜனவரி மாதத்தில் நடத்த உத்தேசித்துள்ளதால், டிசெம்பர் மாதத்துக்கான விடுமுறையை ஜனவரி மாதம் வழங்குவது குறித்துக் கல்வி அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

ஆகவே, ஒகஸ்ட் மற்றும் டிசெம்பர் மாதங்களில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு க.பொ.த. உயர்தரம், 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகள் நடத்தப்படும் காலங்களில் பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை வழங்குவதற்கு கல்வி அமைச்சின் உயர்மட்ட குழு கலந்தாலோசித்து வருகிறது.

5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை ஒக்ரோபர் 3 ஆம் திகதியன்றும், க.பொ.த உயர்தரப்பரீட்சை ஒக்ரோபர் 4 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையிலும்ம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை அடுத்தாண்டு ஜனவரி மாத கடைசி வாரத்தில் ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. (எ)

# பெரமுன அரசை கவிழ்க்கும் சூழ்ச்சிக்கு துணைபோகாதீர்!

## பங்காளிகளிடம் ஜனாதிபதி வேண்டுகோள்



கொழும்பு, ஏப். 13

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசைக் கவிழ்ப்பதற்கு எதிரணியினர் பல வழிகளிலும் சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அரசிலுள்ள எவரும் இதற்குத் துணைபோகக் கூடாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களிடம் நேரில் வேண்டுகோள் விடுத்துள்ளார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

ஸ்ரீலங்கை சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் அக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த வியாழக்கிழமை இரவு விசேட சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான அமைச்சர் விமல் வீரவன்ஸ, அமைச்சர் உதய கம்மன்பில, அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ விதாரண, ஏ.எல்.எம்.அதாவுல்லா, அத்துரலிய ரத்ன தேரர் மற்றும் முன்னாள் அமைச்சர் டி.யூ. குணசேகர உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். ஆளும் தரப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டதால் கொழும்பு அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அரசுக்குள் பூகம்பம் வெடித்துள்ளது என்றும், அரசு விரைவில் கவிழும் என்றும் எதிரணியினர் சிங்கள ஊடகங்களிடம் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் அவசர சந்திப்பை நடத்தியுள்ள ஜனாதிபதி, மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசிலுள்ள பங்காளிக் கட்சிகள் ஒன்றுகூடிப் பேசுவதில் தவறு இல்லை. ஆனால், அந்தச் சந்திப்புக்கள் எதிரணியின் சூழ்ச்சிகளுக்குத் துணைபோகக் கூடாது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவராக - பலம் மிக்க தலைவராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இருக்கின்றார். பங்காளிக் கட்சிகள் தங்கள் குறைநிறைகளை அவருடன் நேரில் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும்.

நாட்டு மக்களின் அமோக ஆதரவுடன் இந்த ஆட்சி அமைக்கப்பட்டது. இதைக் கவிழ்ப்பதற்கு எவரும் இடமளிக்கக்கூடாது.

மக்களின் ஆணையை மீறி நடப்பவர்கள் அரசியலில் முகவரி இல்லாமல் போவார்கள். இது கடந்த கால வரலாறு.

எதிரணியின் சதி முயற்சிகளை நாம் ஓரணியில் நின்று தோற்கடிக்க வேண்டும் - என்றார்.

# புத்தாண்டு சதொச பொதியை அவதூறாக பேசியவர்களிடம் நட்டஈடு கோரப்படும்

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 13

புத்தாண்டு காலத்தை முன்னிட்டு பொது மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட சதொச நிவாரணப் பொதி குறித்து அவதூறாகப் பேசியவர்களிடம் 500 மில்லியன் ரூபா நட்டஈட்டை பெற்றுக் கொள்ள சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நிவாரணம் வழங்க அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தது. 12 அத்தியாவசிய பொருட்களை உள்ளடக்கிய ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரண பொதி அனைத்து சதோச விற்பனை நிலையங்கள் ஊடாக கடந்த முதலாம் திகதி தொடக்கம் விற்பனை செய்யப்படுகிறது.

நிவாரணப் பொதியை விற்பனை செய்யும்போது ஒரு சிலர் நிவாரணப்பொதி தொடர்பில் போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். அது தொடர்பில் கொம்பனித்தெரு காவல் துறையில் சதோசவின் தவிசாளர், தேயிலை விநியோகஸ்தர்கள், அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தவிசாளர், சமூக வியாபார இயக்கத்தினர் ஆகியோர் இணைந்து அவர்களது வர்த்தக நடவடிக்கைக்கைக்கு ஏற்படுத்தப்பட்ட அவமானம் குறித்து முறைப்பாடு செய்துள்ளார்கள். நிவாரணப் பொதி தொடர்பில் தவறான கருத்துக்களை வெளியிட்டவர்களை கைதுசெய்து ஊடகங்கள் முன்பாக அவர்களது கருத்துகளை பகிரங்கப் படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

நாம் இதுவரை நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வந்த தரகு வர்த்தக செயற்பாடுகளை நிறுத்தியுள்ளோம். மிளகு 100 கிராம் 300 ரூபாவுக்கு விற்கப்பட்டது. ஆனால், இந்த அரசாங்கம் மிளகு செய்கையை ஊக்கபடுத்தி ஒரு பை மிளகை 170 ரூபாவுக்கு வழங்கியது.

அதேபோல் ஒரு கிலோகிராம் கஜூவை 1,100 ரூபாவாக குறைத்துள்ளது. எனவே இதுவரை இடம்பெற்று வந்த தரகு கொள்ளை வர்த்தகத்தை நிறுத்துவதற்காக அரசாங்கம் தலையிட்டுள்ளது-என்றார்.

# 144 பேர் குணமடைவு

கொழும்பு, ஏப். 13

கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 91 ஆயிரத்து 775 ஆக உயர்ந்துள்ளது

கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 144 பேர் குணமடைந்துள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் இதுவரை தொற்று உறுதியான 94 ஆயிரத்து 775 பேரில் 2 ஆயிரத்து 758 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, இலங்கையில் கொரோனா தொற்று உறுதியானவர்களில் 598 பேர் இதுவரை உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவிலும் கிடைக்காது சமஷ்டி!

## அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிப்பு



**கொழும்பு, ஏப்.13**

**புதிய அரசமைப்பிலும் ஒற்றையாட்சியே பேணப்படும். ஒற்றையாட்சியால் நாடு எந்தப் பேரழிவையும் சந்திக்கவில்லை. சமஷ்டி அல்லது கூட்டாட்சி என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

புதிய அரசமைப்பு உருவாக்க நிபுணர் குழுவிடம் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யோசனைகளை அந்தக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் அண்மையில் சமர்ப்பித்திருந்தார். அதில் ஒற்றையாட்சியால்தான் நாடு பேரழிவைச் சந்தித்தது என்றும், புதிய அரசமைப்பில் சமஷ்டி அல்லது கூட்டாட்சி முறைமை உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அமைச்சர் சரத் வீரசேகர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமஷ்டி அல்லது கூட்டாட்சி என்ற பேச்சுக்கு இந்த ஆட்சியில் இடமில்லை.

இந்த முறைமைகள் புதிய அரசமைப்பில் இருக்க வேண்டும் என்று விக்னேஸ்வரன் அணியினர் கனவு காணக் கூடாது.

நடைமுறையில் இருக்கும் ஒற்றையாட்சி முறைமை மூலம் தான் தேசிய இனப்பிரச்னைக்குத் தீர்வு காணப்படும்.

புதிய அரசமைப்பில் இது தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடப்படும்.

ஒற்றையாட்சி முறைமையால் இந்த நாடு பேரழிவுகளைச் சந்திக்கவில்லை. பேரழிவை நோக்கிச் சென்று கொண்டிருந்த நாட்டை மீட்டெடுத்தோம். தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழக் கனவைத் தவிடுபொடியாக்கினோம். அவர்களை இல்லாதொழித்தோம்.

சமஷ்டி அல்லது கூட்டாட்சி முறைமைதான் பிரிவினைக்கு வழிவகுக்கும். அது நாட்டைப் பிளவுபடுத்தும் நாட்டின் நல்லிணக்கத்துக்குப் பாதகமாக அமையும் - என்றார்.

## உச்சத்தை தொட்ட டொலரின் விலை

கொழும்பு, ஏப். 13

மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலரின் விற்பனை விலை 203.73 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அமெரிக்க டொலரின் விற்பனை விலை, கடந்த வெள்ளிக்கிழமை நிலவரப்படி 203.59 ரூபாவாக பதிவாகியிருந்தது.

ரூபாவுக்கு நிகரான அமெரிக்க டொலரின் விற்பனை விலை வரலாற்றில் முதன் முறையாக 200 ரூபாவை கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புத்தாண்டை முன்னிட்டு மேலதிக ரயில்கள், பஸ்கள்

கொழும்பு, ஏப். 13

எதிர்வரும் புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் அலுவலக ரயில்கள் உட்பட கிட்டத்தட்ட 30 ரயில் பயணங்களை ரத்து செய்ய ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, இன்று மற்றும் நாளை இரண்டு நாட்கள் மாத்திரம் ரயில் பயணங்கள் ரத்து செய்யப்படும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், புத்தாண்டை முன்னிட்டு கிராமப் புறங்களுக்கு பயணிப்பவர்களுக்கும், மீண்டும் கொழும்பு திரும்புவோருக்கும் வழக்கம் போல் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையில், கொழும்பிலிருந்து வேறிடங்களிற்கு செல்பவர்களிற்காக 3,000 மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

புத்தாண்டு காலத்தில் வழக்கமாக 500 மேலதிக பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்படும். எனினும், இம்முறை சுகாதார வழிகாட்டுதல்களை அடிப்படையாக கொண்டு 3,000 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. அதனால் மக்கள் பிரயாணங்களில் சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்ற கோரப்பட்டுள்ளனர்.

இவை காலஅட்டவணையின்படி செயற்படாது. மத்திய பஸ் நிலையம், பஸ்தியன் மாவத்தை, மகும்புர சாலைகளில் இருந்து மக்களின் தொகைக்கேற்ப புறப்படும்.

# உயர்நீதிமன்றில் அம்பிகா மனு!

கொழும்பு, ஏப். 13

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான புதிய ஒழுங்கு முறை விதிமுறைகளை சவால் செய்து, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனுவை தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 9ஆம் திகதி மனுத் தாக்கல் செய்தார்.

புதிய விதிமுறைகளில் தெளிவற்ற சொற்கள் உள்ளன, அவை பரந்த பயன்பாடுகளுக்கு வாய்ப்பேற்படுத்தும் என்று அவரது மனு கூறுகிறது. அரசமைப்பின் 10, 12, 13 மற்றும் 14.சரத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் இதனால் மீறப்படலாமென அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைக்கு மாறாக கைது மற்றும் தடுப்புக்காவலை விதிமுறைகள் அனுமதிக்கின்றன என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பின்னர் விசாரணையைத் தொடங்க அனுமதிக்கவும், இது ஒரு நபரை கைது செய்வதற்கான காரணத்தை அறிவிக்காமல், ஒரு நபரை குற்றவாளியாகக் கருதுவது போல் நியாயமான விசாரணைக்கு உரிமை பெறாமல் ஒருவரை புனர்வாழ்வுக்கு உட்படுத்த அனுமதிக்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் சட்டபூர்வ பிரதிநிதித்துவத்தை அணுகுவதை விதிமுறைகள் தடுக்கலாம்,நீதித்துறை ஆய்வு இல்லாமல் 12 மாதங்கள் தடுப்புக் காவலை மேலும் 12 மாதங்களுக்கு நீட்டிக்க அனுமதிக்கப்படுகிறது.

இந்த காரணிகள் அனைத்தும் ஒரு நபரை உரிமை மீறல்களுக்கு ஆளாக்கூடும் என்று அந்த மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## "யாழ்.மாநகர சபை முதல்வர் நல்லிணக்க அடிப்படையிலேயே விடுவிக்கப்பட்டார்"

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் நல்லிணக்க அடிப்படையிலே கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார் என மாநகர சபை உறுப்பினர் சட்டத் தரணி ரெமிடியஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாநகர முதல்வர் பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு பின்னர் சாதாரண வழக்குக்கு மாற்றப்பட்டு விடுவிக்கப்பட்டமை அரசின் நல்லிணக்க வெளிப்பாடாகும். மணிவண்ணனை விடுதலை செய்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியுடன் நேரடியாக பேசியிருந்தார் -என்றார்.

## கிளிநொச்சியில் வீட்டுத்திட்டப் பணம் கிடைக்காமையால் பயனாளிகள் நிர்க்கதி

கிளிநொச்சி, ஏப். 13

இந்திய அரசின் நிதி உதவியில் மாவட்டத்திற்கு ஒரு கிராமம் எனும் வீட்டுத் திட்டத்தில் கிளிநொச்சியில் மலையாளபுரம் கிராமம் தெரிவு செய்யப்பட்டு 24 வீடுகள் வழங்கப்பட்டபோதும் அந்த வீடுகளை முழுமையாக அமைத்து முடிப்பதற்கான நிதி பயனாளிகளுக்கு வழங்காமையால் அவர்கள் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த 2018 ஆம் ஆண்டு மலையாளபுரம் கிராமத்தில் காணிகளுடன் 24 வீடுகளும் வழங்கப்பட்டன. இதில் வீட்டுத்திட்டத்துக்கான பணம் முதல் கட்டம், இரண்டாம் கட்டம் என வழங்கப்பட்ட நிலையில் மிகுதிப் பணம் இதுவரை வழங்கப்படவில்லை.

இதனால் வீடுகளைப் பூரணப் படுத்த முடியாத நிலையில் பயனாளிகள் காணப்படுகின்றனர். தாங்கள் வாழ்கின்ற தற்காலிக வீடுகளும் காலாவதியான நிலையில் நிரந்தர வீட்டையும் பூரணப்படுத்தி அங்கும் செல்ல முடியாத நிலையில் இருப்பதாக வீட்டுத்திட்டப் பயனாளிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதில் சில பயனாளிகள் வீட்டுத்திட்டப் பணம் கிடைக்கும் என நம்பி 10 வீத வட்டிக்கு பணத்தை பெற்று வீட்டு வேலைகளை நிறைவு செய்து குடியேறிவிட்டதாகவும், ஆனால், வீட்டுத்திட்டப் பணம் கிடைக்காமையால் பெரும் நெருக்கடியைச் சந்திப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தாம் அதிகாரிகளிடம் சென்று வினவிய போது, வீட்டுத்திட்டத்திற்கான பணம் தங்களுக்கு கிடைக்கவில்லை என தெரிவித்துவருகின்றனர் எனப் பொது பொது மக்கள் குறிப்பிடுகின்றனர்.

எனவே, தங்களின் இந் நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு மிகுதிப் பணத்தை விரைவாக கிடைக்க உதவி செய்யுமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

# மன்னாரில் சமூகநல கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை ஆரம்பம்!

மன்னார், ஏப்.13

மன்னார் மாவட்டத்தில் தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கொவிட்-19 பாதிப்புக்கு உள்ளான குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான சமூக நல கொடுப்பனவு வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் ஏற்பாட்டில் மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப் தலைமையில் இடம் பெற்ற இந்த கொடுப்பனவு வழங்கும் ஆரம்ப நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல், பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவருமான காதர் மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் மன்னார் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் உற்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்,சமுர்த்தி அலுவலகர்கள், பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர். இதன்போது மன்னார்மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஆரம்ப நிகழ்வின்போது வைபவ ரீதியாக 5 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் சமுர்த்திப் பயனாளிகள் குடும்பம், குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பம், முதியோர் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளும் குடும்பங்கள் ,அங்கவீன கொடுப்பனவு, சிறுநீரக நோய் காரணமாக கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும் குடும்பங்கள் என 5 கட்டமாக 32 ஆயிரத்து 277 குடும்பங்கள் குறித்த 5 ஆயிரம் ரூபா நிதியை பெற்றுக்கொள்ள தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் ஆரம்ப நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு குறித்த கொடுப்பனவுகள் விருந்தினர்களால் வழங்கப்பட்டதோடு, மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உரிய சமுர்த்தி அலுவலர்கள் ஊடாக உடனடியாக வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நள்ளிரவு வீடு புகுந்த கொள்ளையரின் சித்திரவதையில் வயோதிபர் மரணம்!

## அல்லாரையில் ஞாயிறு இரவு சம்பவம்

யாழ்ப்பாணம்,ஏப்.13

**நள்ளிரவில் வீடு புகுந்த கொள்ளைக் கும்பல் வயோதிபத் தம்பதியை துன்புறுத்தியதில் வயோதிபர் உயிரிழந்தார்.**

இந்தச் சம்பவம் தென்மராட்சி அல்லாரையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் சிவராசா (வயது-72) என்ற வயோதிபரே கொலை செய்யப்பட்டார்.

வயோதிபத் தம்பதி வசிக்கும் வீட்டுக்குள் நள்ளிரவு வேளை வீடு புகுந்த மூவர் கொண்ட கொள்ளைக் கும்பல் அவர்கள் இருவரையும் கட்டி வைத்து துன்புறுத்தியுள்ளது. அதில் வயோதிபரின் கழுத்தை நெரித்ததில் அவரது உயிர் பிரிந்தது.

அத்துடன், வீட்டிலிருந்த ஒன்றரை லட்சம் ரூபா பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையிட்டு கும்பல் தப்பித்துள்ளது.சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பொலிஸாரை ஆயுதத்தால் தாக்கிய வியாபாரி கைது!

கொழும்பு, ஏப். 13

பசறை நகரில் கடமையில் ஈடுபட்டு இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கிய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பசறை நகரில் பேருந்து தரிப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள அங்காடியில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் பாதசாரிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்தில் நடந்து கொண்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதனையடுத்து அப்பகுதியில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அவ்விடத்துக்கு சென்று பாதசாரிகளுக்கு இடையூறு விளைவிக்கவேண்டாம் என குறித்த நபருக்கு கூறியுள்ளார்.

இதனால், ஆத்திரமுற்ற அந்நபர் கையில் வைத்திருந்த கூரிய ஆயுதத்தால் பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கியுள்ளார். இதன்போது காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தரை அயலவர்கள் உதவியுடன் பசறை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

சந்தேக நபரை பசறை பொலிஸார் கைது செய்து. மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# எஸ்.பி., டிலான், அனுரவுக்கு விரைவில் அமைச்சுப் பதவி!

கொழும்பு, ஏப். 13

பிலவ புத்தாண்டுக்குப் பின்னர், அமைச்சரவையில் மாற்றம் செய்வதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அமைச்சரவை மாற்றத்தின் போது, ஆளும் கட்சியிலிருக்கும் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மூவருக்கு இராஜாங்க அமைச்சு பதவிகள் வழங்கப்படவுள்ளன என அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்பி திஸாநாயக்க, அநுர பிரியதர்சன யாப்பா மற்றும் டிலான் பெரேரா ஆகியோருக்கே அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# சட்டவிரோதமாக அகழப்பட்ட 750 டிப்பர் மண் பொலிஸார் வசம்

## கிராம அலுவலரின் மனைவி கைது

முல்லைத்தீவு, ஏப். 13

முல்லைத்தீவு - கருவேலன் கண்டல் மானுருவி பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி காணி ஒன்றில் சட்டவிரோதமாக அகழ்ந்து குவிக்கப்பட்டிருந்த சுமார் 750 டிப்பர் லோட் கிரவலை தமது ஆளுகையின் கீழ் கொண்டுவந்துள்ள ஒட்டுசுட்டான் பொலிஸார் குறித்த காணிக்கு உரிமை கோரிய கிராம அலுவலரின் மனைவியையும் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கருவேலன்கண்டல் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மானுருவி பகுதியில் அனுமதிப்பத்திரம் அற்ற காணி ஒன்றில் சட்டவிரோதமாக கிராம அலுவலர் ஒருவரால் பெரும் அளவில் கிரவல் அகழ்ந்து குவிக்கப்பட்டுள்ளபோதும் இதற்கு எதிராக திணைக்களங்கள் எதுவும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் மாலை சம்பவ இடத்துக்குச் சென்ற ஒட்டுசுட்டான் பொலிஸார் குறித்த கிரவல் குவித்து வைக்கப்பட்டிருந்த இடங்களை பார்வையிட்டதோடு அந்த இடம் தொடர்பிலும் இங்கு கிரவல் யார் அகழ்ந்தது என்பது தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது குறித்த பகுதியில் கிராம அலுவலர் ஒருவரே குறித்த கிரவல் அகழ்வை மேற்கொண்டதாக அயலவர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து அந்த காணிக்கு உரிமை கோரிய கிராம அலுவலரின் மனைவியை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அமைச்சர் ஜீவனுக்கு எதிராக வடிவேல் சுரேஷ் போர்க்கொடி!

கொழும்பு, ஏப். 13

தாய் குலத்தை இழிவு படுத்தும், வகையில், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆற்றிய உரையை வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்று பதுளை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் கூட்டாக சுயமாக தமது கண்டனங்களை தெரிவித்துள்ளனர்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பதுளைப் பிராந்தியப் பணிமனையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது, பிரதேச சபை உறுப்பினர்களான எஸ். கார்த்தீஸ்வரன், எம்.பி. லோகநாதன், டி. யோகராஜா ஆகியோர் உரையாற்றுகையிலேயே, மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

பிரதேச சபை உறுப்பினர் எஸ். கார்த்தீஸ்வரன் பேசும் போது, 'குட்டி ஆடு கொழுத்தாலும்,வழுவழுப்பு மாறாது என்ற பேச்சு வழக்கு முதுமொழிக்கமைய இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆற்றிய உரையானது ஜீரணிக்க முடியாததொன்றாகும். அவர் ஆற்றிய உரை முழு தாய்க்குலத்தையே அவமானப் படுத்துவதாக அமைந்துள்ளது.

பெண்களை கௌரவப்படுத்தும் மகளிர் தினத்தை கொண்டாடிய அடுத்து வரும் மாதத்தில் அந்தப் பெண்களையே அவமானப்படுத்தும் வகையிலும், இழிவுபடுத்தும் வகையிலும் எமது சமூகத்திற்கு விரும்பியும், விரும்பாமலும் ஏற்படுத்தப்பட்ட தலைவர் என்று தம்மைக் காட்டிக் கொண்டவர் செயற்பட்டிருக்கின்றார். இவ் உரைக்கு நாட்டின் முழு தாய்க் குலமும் எதிர்த்து குரல் கொடுக்க வேண்டியதொன்றாகும். இந் நாடே ஸ்தம்பிக்கும் வகையில் பாரிய கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் உரையானது, ஏனைய சமூகங்களும், எமது சமூகப் பெண்களை குறைந்து மதிப்பிட வைத்துள்ளது. ஆகவே, ஜீவன் தொண்டமானின் இச் செயல்பாடுகளுக்கு அவர் மலையக மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். அத்துடன் அடுத்து வரும் பாராளுமன்ற அமர்விலும் அவர் மன்னிப்பு கேட்டேயாக வேண்டும்' என்றார்.

லுணுகலை பிரதேச சபை உறுப்பினர் எஸ். கனகசுந்தரி தமதுரையில், 'ஜீவனுக்கு கிடைக்கப்பெற்ற அனுதாப வாக்குகளில் பெரும்பாலான வாக்குகள், மலையகப் பெண்களால் கிடைக்கப்பெற்ற வாக்குகளாகும். இந்நிலையில், அவர் எமது பெண்களுக்கு தகுந்த சன்மானத்தை வழங்கியுள்ளார். இப்புத்தாண்டில் அவர் எமக்கு வழங்கிய இந்தச் சன்மானமே பெரிதாகும்.

பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் முயற்சியினால் கிடைக்கப்பெற்ற ஆயிரம் ரூபா தினச் சம்பள உயர்வில், ஜீவனுக்கு ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியே, ஜீவன் ஆத்திரத்தினால் இப்படி பேசியிருக்கின்றார். அவரது இந்தப் பேச்சை என்றுமே மறக்க மாட்டோம். அடுத்து வரும் தேர்தலில், எமது பெண்கள் தகுந்த பாடத்தைப் புகட்டுவார்கள்-என்றார்.

லுணுகலை பிரதேச சபை எதிர்க்கட்சித்த தலைவர் எம்.பி. லோகநாதன் தமதுரையில், 'பொறுப்புமிக்கவர்களாக தம்மைக் காட்டிக்கொள்பவர்கள், பொறுப்புடன் நடந்து கொள்ளல் வேண்டும். சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்ளக்கூடாது.

தமது மூதாதையர்கள் கட்டிக்காத்த, வரலாறு கூறும் மலையகத்தின் முக்கிய தொழிற்சங்கமொன்றை பிரதிநிதித்துவம் செய்யும் பொறுப்புமிக்கவர்கள் மகளீரை இழிவுப்படுத்தும் வகையில் உரையாற்றியிருக்கக் கூடாது. தமது வாயிலிருந்து வெளிக்கொணரப்படும் எந்தவொரு சொல்லும் நிதானித்துப் பேசவேண்டும்.

வார்த்தைகள் வெளிவந்த பின்னர் எதுவும் செய்ய முடியாது. நாம் எதையும் பேசலாம். மக்கள் அதனைக் கேட்க வேண்டுமென்று இருந்து வரும் நிலைப்பாடு மாற வேண்டும். மக்கள் புத்தி சாதுரியமாக இருக்கின்றனர். சொல்வதற்கெல்லாம் மக்கள் 'ஆம்' என்று கூறும் நிலை இன்று இல்லை-என்றார்.

# ஜீவன் மன்னிப்பு கோரவேண்டும்



## வேலுகுமார் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 13

"தாய்குலத்தை கொச்சைப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்ட ஜீவன் தொண்டமான் பகிரங்கமாக மன்னிப்பு கோர வேண்டும்." - என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிதிச்செயலாளருமான வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண் டமான் தாய்குலத்தை கொச்சைப் படுத்தியுள்ளார். இதனை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். தவறு செய்துவிட்டு அதற்கு மன்னிப்பு கோருவதற்கு பதிலதாக தவறு இடம்பெற்றது என்பதை மட்டும்தான் ஜீவன் ஏற்றுக்கொண்டுள்ளார். செய்த தவறுக்காக அவர் மன்னிப்பு கோரவில்லை. இதனையும் கண்டிக்கின்றேன். அவர் நிச்சயம் மன்னிப்பு கேட்டாக வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● பாலசிங்கம்

**தமிழக உளவுத்துறை உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டதற்கு, "கமல் கட்சிக்கு நகர்ப்புறங்களில் கணிசமாக வாக்குகள் விழுந்திருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் கமல் தொகுதியைத் தவிர மற்ற தொகுதிகளில் இரண்டாவது இடத்தைப் பிடிப்பதற்கெல்லாம் வாய்ப்பே இல்லை. அதேபோன்று இவருக்கு 8 சதவிகிதம், சீமானுக்கு 10 சதவிகிதம், தினகரனுக்கு 5 சதவிகிதம் என்று கணக்குப் போடுவது மிகவும் அதீதமாகத் தெரிகிறது என்றார்.**



# கட்சிக்கு விழும் வாக்கு... கமலுக்கு வந்து சேர்ந்த கணக்கு!

இந்தத் தேர்தலில் தி.மு.க. ஆட்சியைப் பிடிக்குமா, அதிமுக ஆட்சியைத் தக்கவைக்குமா என்ற கேள்விக்கு இணையாக அல்லது அதற்கும் மேலாக விவாதிக்கப்படும் ஒரு விஷயம், கமலும், சீமானும், தினகரனும் எந்தெந்தக் கட்சியின் வாக்குகளை எவ்வளவுக்குப் பிரிப்பார்கள் என்பதுதான். மற்றவர்களை அப்புறம் பார்க்கலாம். உலக நாயகன் முதன்முறையாகக் களம் இறங்கியிருக்கும் சட்டமன்றத் தேர்தல் இது என்ற வகையில், அவருக்கு எவ்வளவு வாக்குகள் விழும், அது யாருடைய வெற்றியை பாதிக்கும் என்பதுதான் படித்த, மேல்தட்டு மக்களிடம் நடக்கின்ற பட்டிமன்றமாக இருக்கிறது.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதிலிருந்து, கோவையில் மையம்கொண்ட மய்யத்தின் புயல், வாக்குப்பதிவுக்குப் பின்புதான் சென்னையில் நிலை கொண்டிருக்கிறது. ஏற்கெனவே காலில் ஏற்பட்ட காயத்தோடு, களத்தில் கலக்கிக்கொண்டிருந்த கமல், இப்போதுதான் சற்று ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார் என்று அவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகின்றனர். ஆனாலும் தேர்தல் முடிவுகள் எப்படியிருக்கும், நமக்கு எவ்வளவு வாக்குகள் விழும் என்று தனது கட்சி நிர்வாகிகளிடமும், கட்சிக்கு அப்பாற்பட்டு, தனக்கிருக்கும் நட்பு வட்டாரத்திலும் கமல் விசாரித்துக் கொண்டேயிருக்கிறார் என்றும் தகவல்கள் வருகின்றன. அவர்கள் அவருக்கு அப்படி என்ன தகவல்களைச் சேர்க்கிறார்கள், அவர் என்ன நம்பிக்கையில் இருக்கிறார் என்று கமலின் நிழலாக வலம் வரும் மக்கள் நீதி மய்யத்தின் முக்கிய நிர்வாகிகள் சிலரிடம் பேசினோம்...

"கட்சி துவக்கிய சில மாதங்களிலேயே பாராளுமன்றத் தேர்தலை நாங்கள் எதிர்கொண்டோம். அப்போது கமலுக்கு அரசியலும் புதிது; தேர்தலும் புதிது. பல விஷயங்கள் பிடிபடவே இல்லை. சட்டமன்றத் தேர்தலுக்குள் அரசியல் ரீதியாகப் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டார். ஆனால், பாராளுமன்றத் தேர்தலைப் போல சட்டமன்றத் தேர்தல் களம் அவ்வளவு எளிதாக இல்லை. முற்றிலும் புதிதாகவும் புதிராகவும் இருந்தது. ரஜினியுடன் சேர்ந்து தேர்தலைச் சந்திக்க அவர் திட்டமிட்டிருந்தார். அது நடக்கவில்லை என்றதும் சற்று விரக்தியுடன்தான் களத்தில் இறங்கினார். சட்டமன்றத் தேர்தலில் விளையாடிய பணம் அவருக்குப் பெரும் அச்சுறுத்தலாகவும், அலுப்பூட்டுவதாகவும் இருந்தது.

ஆனாலும் கோவையில் அவர் போட்டியிடுகிறார் என்றதும் அவருக்குக் கிடைத்த வரவேற்பு அவரை உற்சாகப்படுத்தியது. கோவையில் தெருவில் இறங்கி அவர் தீவிரமாகப் பிரசாரம் செய்தபோது, மக்கள் கொடுத்த ஆதரவு, அவருக்கு வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தியது. வாக்குப்பதிவுக்குப் பின்னும் அந்த நம்பிக்கை அவருக்கு நிறையவே இருக்கிறது.

அவர் போட்டியிட்ட கோவை தெற்கு தொகுதியில், ஏற்கெனவே கடந்த தேர்தலில் வாங்கியிருந்த 23,000 வாக்குகளுடன் அவருக்கென்று கணிசமாக வாக்குகள் விழுந்திருக்கின்றன. அதில் தி.மு.க. வாக்குகளும், அ.தி.மு.க. வாக்குகளும் இருக்கின்றன. அங்கே 30,000 இஸ்லாமியர் வாக்குகள் இருக்கின்றன. அவை இவருக்கு அதிகமாகக் கிடைத்திருந்தாலும் அல்லது திமுகவுக்குப் பாதி இவருக்குப் பாதி என்று கிடைத்திருந்தாலும் கண்டிப்பாக ஜெயித்து விடுவார். இவைதான் அவருக்குக் கிடைத்த தகவல்கள். ஆக இந்த முறை மக்கள் நீதி மய்யம் முதன்முறையாக சட்டமன்றத்திலும் காலடி வைத்துவிடும். அதுவும் எங்கள் தலைவரே செல்வதால் அது கட்சியின் எதிர்காலத்துக்கு நல்ல அடித்தளமாக அமையுமென்பது நிச்சயம். ஒரு தொகுதியில் வெற்றி என்பதோடு, கோவை வடக்கு, சிங்காநல்லூர், மயிலாப்பூர், திருவெறும்பூர் உள்ளிட்ட சில தொகுதிகளில் இரண்டாவது இடத்துக்கு வருவதற்கும் வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் வந்துள்ளன.

இதைத் தவிர்த்து, மற்ற தொகுதிகளைப் பற்றியும் அவருக்கு நிறைய தகவல்கள் வருகின்றன. நகர்ப்புறங்களில் படித்தவர்கள், மேல்தட்டு மக்கள், உயர் வகுப்பினர் என பல தரப்பினரின் வாக்குகளும் கணிசமான அளவில் அவருக்குக் கிடைத்திருக்கின்றன. இவற்றில் பெரும்பாலான வாக்குகள், திமுகவுக்குச் செல்லக்கூடியவை. அதனால் பல தொகுதிகளில் திமுகவின் வெற்றி பாதிக்கப்படும் வாய்ப்பு அதிகமுள்ளது. அதைப்பற்றித்தான் அவர் அதிகமாக விசாரித்துக் கொண்டேயிருக்கிறார். தமிழகம் முழுவதும் 150க்கும் குறைவான தொகுதிகளில்தான் கட்சி போட்டியிட்டிருக்கிறது. அதிலும் நகர்ப்புறங்களில் மட்டுமே நிறைய வாக்குகள் விழுந்திருக்கின்றன. கிராமப்புறங்களில் கட்சிக் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டியுள்ளது. இந்த தேர்தலில் போட்டியிட்ட தொகுதிகளை வைத்து 6இல் இருந்து 8 சதவிகித வாக்குகள் எங்களுக்குக் கிடைக்குமென்று தகவல்கள் கிடைத்துள்ளன. அது அவரை பெரிதும் உற்சாகப்படுத்தியுள்ளது.

அதேநேரத்தில் 234 தொகுதிகளிலும் நாம் தமிழர் கட்சி போட்டியிடுவதால், அவர்களுக்கு கூடுதலாக 2 சதவிகிதம் கிடைக்க வாய்ப்புள்ளதாகவும், அமமுகவுக்கு 4இல் இருந்து 5 சதவிகித வாக்குகள் கிடைக்குமென்றும் அவரிடம் புள்ளி விவரம் தரப்பட்டிருக்கிறது. தி.மு.க. கூட்டணியிலிருந்து முதலில் வெளியே வந்த பச்சமுத்து கட்சிதான் முதலில் இவருடன் சேர்ந்தது. அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து வந்த சரத்குமார் பின்னால் வந்து சேர்ந்தார். ஆனால், ஒட்டுமொத்தமாக கமல் அமைத்த கூட்டணியால் திமுக கூட்டணியின் வாக்கு வங்கிக்குத்தான் பாதிப்பு ஏற்படுமென்பது உறுதியாகியிருக்கிறது" என்றார்கள்.

கமல் கட்சியினர் போடும் கணக்கு பற்றி, தமிழக உளவுத்துறை உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டதற்கு, "கமல் கட்சிக்கு நகர்ப்புறங்களில் கணிசமாக வாக்குகள் விழுந்திருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் கமல் தொகுதியைத் தவிர மற்ற தொகுதிகளில் இரண்டாவது இடத்தைப் பிடிப்பதற்கெல்லாம் வாய்ப்பே இல்லை. அதேபோன்று இவருக்கு 8 சதவிகிதம், சீமானுக்கு 10 சதவிகிதம், தினகரனுக்கு 5 சதவிகிதம் என்று கணக்குப் போடுவது மிகவும் அதீதமாகத் தெரிகிறது. இந்த மூன்று கட்சியினருமே 20 சதவிகித வாக்குகளை வாங்கிவிட்டால் திமுக, அ.தி.மு.க. கூட்டணிக்கு எவ்வளவு வாக்குகள் விழும் என்று யோசித்துப் பாருங்கள். ஒவ்வொரு தொகுதியையும் கணக்கிட்டால் மூன்று கட்சிகளுக்கும் சேர்த்தே 10 - 12 சதவிகித வாக்குகள்தான் வாங்க முடியும். மாநில அளவில் சராசரியாகப் பார்த்தால் இது கொஞ்சம் அதிகமாகலாம்" என்றார்.

உலகம் போடும் கணக்கு பல நேரங்களில் தப்பாகிவிடுகிறது... உலக நாயகனின் கணக்கு என்னவாகுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ



# ஜே.வி.பியும் தமிழ் மக்களும்

> **1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய உடன்படிக்கையையும் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தையும் ஜே.வி.பி. முற்றுமுழுதாகச் சிங்களப் பேரினவாத நோக்கிலேயே எதிர்த்தது. 1989இல் ஜே.வி.பியின் தலைமை முற்றாக அழிக்கப்பட்ட நிலையில், 1994ஆம் ஆண்டு பாராளுமன்ற அரசியலில் நுழைந்தது. எனினும், தேசிய இனப்பிரச்னைக்கு அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படையில் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் எடுத்த முயற்சிகளை, ஜே.வி.பி. எதிர்த்தே வந்தது.**

இலங்கையின் பிரதான எதிர்க்கட்சி அமைதிகாக்கையில் பொறுப்புவாய்ந்த எதிர்க்கட்சியின் பணிகளை, ஜே.வி.பி. (மக்கள் விடுதலை முன்னணி) ஆற்றுகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

ஜே.வி.பி, உறுப்பினர்களது பாராளுமன்ற உரைகள் நன்கறியப்பட்டவை. கடந்த இரண்டு தசாப்த காலங்களில், பிரதான எதிர்க்கட்சிகள் செய்யத் தவறியவற்றை, ஜே.வி.பி. பாராளுமன்றத்தில் செய்து வந்திருக்கிறது. குறிப்பாக, சீனிக் கொள்வனவு மோசடி, அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு ஆகியன தொடர்பில் நீதிமன்றில் வழக்குகளைத் ஜே.வி.பி தாக்கல் செய்திருக்கிறது.

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க, அண்மையில் வழங்கிய நேர்காணலொன்றில், 'இறுதிப் போரில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களைக் கண்டறியவும் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பிலும் ஆராய்ந்து, தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் பொறிமுறையை, இலங்கை உருவாக்க வேண்டும்' என்ற பொருள்படக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அநுரகுமார திஸநாயக்கவின் அண்மைய கருத்து, தமிழ் ஊடகங்களில் கவனம் பெற்றாலும், அதை எவ்வாறு புரிந்து கொள்வது என்பதற்கு, ஜே.வி.பியைப் புரிந்து கொள்வது அடிப்படையானது. இதற்கான வாய்ப்பை, கடந்தவாரம் ஜே.வி.பியால் நினைவு கூரப்பட்ட 1971ஆம் ஆண்டுக் கிளர்ச்சி தந்துள்ளது.

சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கையில், ஆயுதமேந்திய முதலாவது கிளர்ச்சி என்றவகையில் அது முக்கியமானது. 1962, 1966ஆம் ஆண்டுகளில், இராணுவச்சதி மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுள்ள போதும், ஒரு கிளர்ச்சியின் மூலம் ஆட்சியைப் பிடிக்கும் முதன்முயற்சியை, 1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரோகண விஜயவீர தலைமையிலான ஜே.வி.பி மேற்கொண்டது. இதேவகைப்பட்ட இன்னொரு முயற்சி, 1988/ 89 காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது.

இரண்டும் படுதோல்வியில் முடிவடைந்ததோடு, ஏராளமான உயிர்களைக் காவுகொண்டன. அரச வன்முறையின் தொடக்கத்துக்கும் இராணுவமயமாக்கல், பொலிஸார் ஆயுதமயமாக்கல் போன்றவற்றுக்கு இவ்விரண்டு கிளர்ச்சிகளும் வழிவகுத்தன.

ஜே.வி.பியை விளங்குவதற்கு அதன் நிறுவனர் ரோகண விஜேவீரவை விளங்குவது முக்கியமானது. இன்றும் அவரின் கொள்கைகளையே பிற்பற்றுவதாக ஜே.வி.பியினரும் அதிலிருந்து பிரிந்தோரும் சொல்கிறார்கள். ரோஹண விஜேவீர, மாக்ஸிய லெனினியக் கொம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து, பேரினவாதச் செயற்பாடுகள் காரணமாக 1966இல் வெளியேற்றப்பட்டார் என்பது முக்கியமானது. அவரது தமிழர் விரோத நிலைப்பாடுகள் முக்கியமானவை.

குறிப்பாக, ஜே.வி.பியின் இனத்துவேஷம், ஐ.தே.க, ஸ்ரீ ல.சு.க ஆகிய பிரதான கட்சிகள் இரண்டையும், கைவிஞ்சும் விதமாக அமைந்ததை மலையகத் தமிழர் பற்றிய அதன் நிலைப்பாடு சுட்டிக் காட்டியது. மலையகத் தமிழரை, இந்திய விஸ்தரிப்பின் கரங்களாக அடையாளங்கண்டு, அவர்களை நாட்டைவிட்டே விரட்ட வேண்டும் என்று கோரியிருந்தது.

ஐந்து பாடங்களில் மாக்ஸியத்தையும் தேசிய அரசியலையும் புரட்சியையும் கற்பித்து, திடீர்ப் புரட்சியொன்றை நடத்தலாம் என்று ஜே.வி.பி தலைமை நம்பியது. இளைஞர்களைக் கவரக்கூடியவாறு ஜே.வி.பியின் பிரசாரமும் வேலைமுறையும் அமைந்தன.

அக்காலத்தில் ஐரோப்பாவில், குறிப்பாக பிரான்ஸில், ஏற்பட்ட இளைஞர் எழுச்சியும் இலத்தின் அமெரிக்காவின் நகரங்களின் சில பகுதிகளைக் குவிமையமாக்கிப் புரட்சியை நடத்தலாம் என்ற கருத்தும் சே குவேரா பற்றிய கவர்ச்சிகரமான படிமமும் ஜே.வி.பியின் புரட்சி பற்றிய பார்வையைத் தீர்மானித்தன.

எனவே, சேகுவேராவின் உலக நோக்கத்துடன் எவ்வித உறவுமற்ற ஜே.வி.பி, 'சே குவேரா குழு' என்று தன்னை வர்ணித்தமை தற்செயலானதல்ல. எனவே, இளைஞர்களையே புரட்சிகர சக்தி என்றும் தொழிற்சங்கங்களையும் தொழிலாளி வர்க்கத்தையும் புரட்சிகர சக்திகளல்ல என நிராகரித்தும், ஓர் அதிரடி நடவடிக்கை மூலம் ஆட்சியைக் கைப்பற்றலாம் என்ற எண்ணம், கிராமங்களையும் சிறு நகரங்களையும் சார்ந்த சிங்கள இளையோர் பலரையும் ஜே.வி.பியிடம் ஈர்த்தது. இளைஞர்களால் நடத்தக் கூடிய ஆயுதப் புரட்சி என்ற கனவு, இளைஞர்களைக் கவர்ந்த போதும், ஜே.வி.பி தலைமையில் இருந்த குழுவாதமும் சந்தர்ப்பவாதப் போக்குகளும், ஒருபுறம் சிறு சிறு பிளவுகளுக்கு வழி கோலின. அவற்றில் சில, சாதி வேறுபாட்டின் அடிப்படையில் அமைந்தன.

1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி, அடுத்தடுத்துப் பல பொலிஸ் நிலையங்களை ஜே.வி.பி. தாக்கிக் கைப்பற்றியது. பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கவை, அவரது வீட்டிலிருந்து சிறைப்பிடித்துச் செல்ல எடுக்கப்பட்ட முயற்சி தோல்வி கண்டது.

இராணுவரீதியிலும் ஆயுதரீதியிலும் வலுவற்றிருந்த இலங்கைக்குப் பல நாடுகள் உதவின. பிரதமரின் அவசர உதவிக் கோரிக்கைக்கு பாகிஸ்தானும் இந்தியாவும் உதவின. பாகிஸ்தான் தனது படைவீரர்களையும் ஆயுதங்களையும் அனுப்பியது. அதைத் தொடர்ந்து, இந்தியாவும் தனது இராணுவப் படையணிகளை அனுப்பி உதவியது.

சுதந்திரத்துக்குப் பிந்தைய இந்தியாவின் முதலாவது தன்னிச்சையான இராணுவ அமைதிகாக்கும் நடவடிக்கையாக இது அமைந்தது. இதற்கு முன்னர், 1957-58 இலங்கையில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்கு, மனிதாபிமான உதவிகளை இந்திய இராணுவம் வழங்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

ஜே.வி.பியின் கிளர்ச்சி வேகமாகவே நசுக்கப்பட்டாலும், அதன் உடனடி விளைவுகளும் அதற்கான எதிர்வினைகளும் அதன் தொடர்விளைவுகளும் இலங்கை அரசியலிலும் அரசினது தன்மையிலும் அயல் உறவுகளிலும் முக்கியமான தாக்கங்களை ஏற்படுத்தின.

ஜே.வி.பி எழுச்சியில் கொல்லப்பட்டோரின் தொகை 15,000க்கும் சற்று அதிகமாக இருக்கலாம் என்று மதிப்பிடப்படுகிறது. கொல்லப்பட்டோரில் மிகச் சிலரே நேரடி மோதலில் இறந்தனர். பெரும்பாலானவர்கள் கைதுசெய்யப்பட்டு, சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர். ஆனால், இவை மறைக்கப்பட்டன.

ஆனால், 'கதிர்காம அழகி' என அறியப்பட்ட பிரேமாவதி மன்னம்பெரி என்ற பெண், பாலியல் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட விவரங்கள் வெளியாகியதால், தவிர்க்கவியலாமல் அரசாங்கம் குற்றவாளிகளைத் தண்டிக்க நேர்ந்தது. ஆனால், வேறு பல கொடிய குற்றங்கள் கண்டும் காணமலே போயின.

இலங்கையில் மோசமான மனித உரிமை மீறல்களினதும் சித்திரவதைகளினதும் தொடக்கம் இதுவே. அதே வேளை, 1971 ஜே.வி.பி கிளர்ச்சி, தென்னிலங்கையில் பொருளாதாரக் காரணங்களால் ஏற்பட்ட அதிருப்தியின் விளைவு என்பதையும் இங்கு நோக்க வேண்டும்.

முதலாவது கிளர்ச்சியின் தோல்வியைத் தொடர்ந்து,ஜே.வி.பி பேரினவாத அரசியலை முன்னெடுக்கத் தொடங்கியது. 1970களின் இறுதிப்பகுதிகளில் இது தொடங்கினாலும் 1981ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலோடு முழுமை பெற்றது.

1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய உடன்படிக்கையையும் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தையும் ஜே.வி.பி முற்றுமுழுதாகச் சிங்களப் பேரினவாத நோக்கிலேயே எதிர்த்தது. 1989இல் ஜே.வி.பியின் தலைமை முற்றாக அழிக்கப்பட்ட நிலையில், 1994ஆம் ஆண்டு பாராளுமன்ற அரசியலில் நுழைந்தது. எனினும், தேசிய இனப்பிரச்னைக்கு அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படையில் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் எடுத்த முயற்சிகளை, ஜே.வி.பி எதிர்த்தே வந்தது.

பாராளுமன்ற அரசியலில், ஐ.தே.கவுக்கும் ஸ்ரீ ல.சு.கவுக்கும் மாற்றான, மூன்றாவது சக்தியாகத் தன்னை வளர்க்க முற்பட்டபோதும், அதனால் நம்பகமான ஓர் இடதுசாரி சக்தியாக வளர இயலாது போயிற்று. அது வேண்டி நின்ற துரித வளர்ச்சிக்கு, அதன் பேரினவாத அரசியல் உதவும் அளவுக்கு, வெகுசன இடதுசாரி அரசியல் உதவாது என்பதால், அது பேரினவாத நோக்கில் அதிகாரப் பரவலாக்கத்தை எதிர்ப்பதை முக்கியப்படுத்தியது.

2002இல் அமைதி சமாதான பேச்சு தொடங்கிய நாள் முதலாக, 2009இல் போர் முடியும் நாள்வரை, ஜே.வி.பி போர் மூலம் பிரிவினை வாதத்தை யும் பயங்கரவாதத்தையும் தோற்கடிப்பதையே தன்னுடைய முக்கியமான கொள்கையாக்கியது.

ஜே.வி.பி இடதுசாரிக் கட்சியல் அது, இடதுசாரி வேடம்பூண்ட பேரினவாதக் கட்சி. ஆனால், அதை இடதுசாரிக் கட்சியென்று அழைப்பது பலருக்கு வாய்ப்பானதாகையால், அவ்வாறே அழைக்கிறார்கள். ஜே.வி.பியில் இருந்து பிரிந்த முன்னிலை சோசலிசக் கட்சியும் (மு.சோ.க) அவ்வாறானதே!

மு.சோ.கட்சி, ஜே.வி.பியின் கருப்பையில் உருவான சிசு. ஜே.வி.பியின் பேரினவாத அரசியலின் முழு விருத்தியின் போதும் அதில் பங்காளிகளாக இருந்தோரே இன்று மு.சோ.க தலைவர்களாய் உள்ளனர். அனைத்தினும் முக்கியமாக, எந்த ரோகண விஜேவீரவின் கொள்கைகள் ஜே.வி.பியை அழிவுக்குள் தள்ளி, அதன் பின்னால் அணிதிரண்ட பல்லாயிரக் கணக்கான இளைஞர்களைக் கொலைக்களத்துக்கு அனுப்பினவோ, அதே விஜேவீரவின் பாதையில் உறுதியாகத் தொடர்வோர், தாங்கள் மட்டுமே என்று, அவர்கள் கூறியுள்ளார்கள்.

இதன் பின்னணியிலேயே இலங்கையின் இனப்பிரச்சினையில் ஜே.வி.பி பேசுவது பற்றிக் கவனத்துடன் நோக்க வேண்டியுள்ளது. இலங்கையில் இனப்பிரச்சினை இருக்கின்றது என்பதையும் இலங்கையின் தேசிய இனங்களுக்கான சுயநிர்ணய உரிமை இருக்கின்றது என்பதையும் ஜே.வி.பியும் அதன்வழிவந்த மு.சோ.கவும் ஏற்கிறார்களா? இதற்குரிய பதிலே, அவர்கள் யார் என்பதை விளங்கப் போதுமானது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி** **39**

02C . இலக்கணத்திற்கு அமைவான சரியான தமிழ் வாக்கியத்தினை தெரிவு செய்தல்.

## 2009 - (3,4,7,8)

♦ ஒவ்வொரு கவிதையிலும் உள்ள வெற்றிடத்திற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

3. பூ விரிகின்றது.
மணம் வீசுகின்றது
பூ வாடுகின்றது.
இதழ் ..................
1. ஆடுகின்றது. 2. விழுகின்றது 3. பறக்கின்றது

4. பிள்ளைகளின் கூட்டம்
இருக்கும் இடம்
பூக்கள் ஆயிரம்
மலர்ந்த ..........
1. தளம் 2. களம் 3. குளம்

♦ பின்வரும் வாக்கியங்கள் கருத்துள்ளனவாக இருப்பதற்குச் செய்ய வேண்டிய மாற்றத்தைத் தெரிவு செய்க,

7. வண்ணத்துப் பூச்சி ரோசா மலரில் நீரைக் குடிக்கின்றது.
1. வண்ணத்துப் பூச்சி என்பதற்குப் பதிலாகப் "குளவி" என்பதை இடுதல்
2. ரோசா என்பதற்குப் பதிலாக "தாமரை" என்பதை இடுதல்
3. நீரை என்பதற்குப் பதிலாக "தேனை" என்பதை இடுதல்

8. பிள்ளை வீதியில் பாடம் படிக்கின்றது
1. பிள்ளை என்பதற்குப் பதிலாக "மகன்" என்பதை இடுதல்
2. வீதியில் என்பதற்குப் பதிலாக "அறையில்" என்பதை இடுதல்
3. பாடம் படிக்கின்றது என்பதற்குப் பதிலாக "ஆரம்பிக்கின்றது" என்பதை இடுதல்

## 2010 - ( 31,32)

♦ தரப்பட்டுள்ள வாக்கியங்களிடையே மிகச் சரியான கருத்துள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

31.(1) அங்குமிங்கும் இருந்த ஒரு மரத்தின் கிளை மீது காகம் பார்த்தது.
(2) ஒரு மரத்தின் கிளை மீது இருந்த காகம் அங்குமிங்கும் பார்த்தது.
(3) அங்குமிங்கும் இருந்த காகம் ஒரு மரத்தின் கிளை மீது பார்த்தது.

32. (1)பெற்றோரிடமும் எப்போதும் ஆசிரியர்களிடமும் மிகப் பணிவாகப் பிள்ளைகள் நடந்து கொள்ள வேண்டும்.
(2) எப்போதும் பிள்ளைகள் மிகப் பணிவாக நடந்து பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் கொள்ள வேண்டும்.
(3) பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் பிள்ளைகள் எப்போதும் மிகப் பணிவாக நடந்து கொள்ள வேண்டும்.

## 2012 - ( 11,12)

♦ வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

11. அம்மா காய்கறிகளைக் கொண்டு வருவதற்குச் சந்தைக்குச் சென்றார். பிள்ளைகள் கற்பதற்கு பாடசாலைக்குச் சென்றனர்.
அம்மா : பிள்ளைகள் எனின், சந்தைக்கு .....................................
(1) காய்கறிகள் (2) பாடசாலைக்கு (3) கற்பதற்கு

12. நல்ல பிள்ளைகள் ஆசிரியரின் வார்த்தைகளைச் செவிமடுக்கின்றனர். பிரசித்தி பெற்ற பாடகர் இனிமையான குரலில் பாட்டுப் பாடினார்.
பிள்ளைகள் : பாடகர் எனின், செவிமடுக்கின்றனர்: ............................
(1) குரலில் (2) பாட்டு (3) பாடினார்

## 2013 - (22)

22. செய்தித்தாள், நாவல், கீதம், சிலை, கவிதை பூ என்பவற்றில் பொருந்தாத சொல்லைத் தெரிவு செய்க.
(1) செய்தித்தாள் (2) கீதம் (3) பூ

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# முன்னறிவித்தலின்றி பணிப்புறக்கணிப்பு தொழிற்சங்கங்கள் மீது சட்ட நடவடிக்கை

## அமைச்சர் காமினி லொக்குகே எச்சரிக்கை



**கொழும்பு,ஏப்.13**

**முன்னறிவித்தலின்றி பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடும் புகையிரத தொழிற்சங்கங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு சில தொழிற்சங்கத்தினரது பின்னணியில் அரசியல் கட்சிகளின் செல்வாக்கு காணப்படுகிறது. குறுகிய நோக்கத்துக்காக பொது மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் செயல்பாடுளை புகையிரத தொழிற்சங்கத்தினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனப் போக்குவரத்துத்துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.**

புகையிரத சேவையில் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு உள்ளிட்ட பல பிரச்னைகள் காணப்படுகின்றன. கடந்த காலங்களில் இப்பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு வாக்குறுதிகள் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதே தவிர பிரச்னைகளுக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கவில்லை.

தொழிற்சங்கத்தினரது கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் பல்வேறு மட்டத்தில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. புகையிரத சேவையில் காணப்படும் தொழில் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்ய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொழிற்சங்கத்தினர் அரசாங்கத்தின் செயல்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தான்தோன்றித்தனமாகச் செயல்பட்டால் புகையிரத சேவையை அத்தியாவசிய சேவையாக்க நேரிடும்.

புகையிரத சாரதிகள் சங்கம், புகையிரத கட்டுப்பாட்டு சங்கம் ஆகிய தொழிற்சங்கத்தினர் திடீரென முன்னெடுத்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# போலி ஆவணங்கள் தயாரிப்பு முற்றுகையில் ஒருவர் கைது!

மட்டக்களப்பு,ஏப்.13

மட்டக்களப்பு வாழைச்சேனையில் போலி ஆவணங்கள் தயாரிப்பு நிலையம் ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸார் ஒருவரைக் கைது செய்ததுடன் மடிக்கணனி, பிறிண்டர் மற்றும் போலி ஆவணங்கள் என்பனவற்றை மீட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து பிறைந்துரைச்சேனை பகுதியிலுள்ள குறித்த வீட்டை சுற்றி வளைத்து முற்றுகையிட்டனர்.

இதன்போது கணனி பயிற்சி நெறிக்கான ஆவணங்கள் உட்பட பல ஆவணங்கள் தயாரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 44 வயது நபர் ஒருவரை கைது செய்ததுடன் ஆவணங்கள் தயாரிப்பதற்கான மடிகணனி, பிறிண்டர், மற்றும் காகித அட்டைகள் என்பனவற்றையும் மீட்டுள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# வீதி விபத்துக்களில் சிக்கிய 13 பேர் ஒரே நாளில் மரணம்

கொழும்பு,ஏப்.13

நாட்டில் நேற்று முன்தினம் மாத்திரம் வீதி விபத்துக்களால் 13 பேர் உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 6 பேர் நேற்று முன்தினம் பதிவான விபத்துக்களில் சிக்கி உயிரிழந்தவர்கள் என்றும் ஏனையோர் அதற்கு முன்னர் பதிவான விபத்துக்களில் சிக்குண்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பண்டிகை காலத்தை கருத்தில் கொண்டு போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடும் சாரதிகளும், பயணிகளும் மிகவும் அவதானத்துடன் செயல்படுமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (எ)

# மேல் மாகாணத்தில் 925 பேர் கைது!

கொழும்பு,ஏப்.13

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு சோதனையின்போது பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 925 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

மேல் மாகாணத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் உத்தரவுக்கு அமைவாகவே நேற்று முன்தினம் காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

குற்றவியல் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய 40 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 306 பேரும், ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக 518 பேருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

இந்நிலையில், கைதான நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு தொடர்புடைய தமிழர்கள் சிலர் இராணுவத்துக்கு எதிராக பொய்ப் பிரசாரம்!

## யாழில் சவேந்திர சில்வா குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம்,ஏப்.13

**வெளிநாட்டு தொடர்புடைய தமிழ் மக்கள் சிலர் இராணுவத்துக்கு எதிராக பொய்ப் பிரசாரம் செய்கின்றனர் என யாழ்ப்பாணத்துக்கு நேற்றுத் திடீரென விஜயம் மேற்கொண்ட இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

யுத்தத்தின்போது கணவனை இழந்த பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றுக்கு இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீட்டினை கையளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு இராணுவத்தினரால் வீடு அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தினர் வீட்டை மட்டுமல்லாது வீட்டுக்குத் தேவையான குளிர் சாதனப்பெட்டி உட்பட்ட அனைத்து பொருள்களையும் வழங்கியுள்ளனர். அத்தோடு குறித்த குடும்பத்தில் ஒரு மாணவியும் உள்ளார். அவரது கல்விக்குத் தேவையான நிதியுதவி மற்றும் பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்திருக்கின்றோம். அத்துடன் மேலதிகமாக அந்த மாணவிக்கு உரிய கல்விச் செயல்பாடுகளுக்கு உதவ தயாராகவுள்ளோம்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் யுத்த காலத்தில் இடம்பெற்ற மோதலின் போது கொல்லப்பட்ட ஒருவரின் குடும்பத்தினருக்கே இவ்வாறு வீடு அமைத்துக் கொடுத்திருக்கின்றோம். இலங்கை இராணுவமானது ஒரு மனிதாபிமான இராணுவம். இதனை, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள்.

இலங்கையின் முப்படையினரும், தமிழ் மக்களுக்கு மனிதாபிமான செயல்பாடுகளை முன்னெடுக்கின்றனர் என யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். ஏனைய தமிழ் மக்களுக்கும் அது நன்றாகப் புரியும்.

ஆனால், வெளிநாட்டில் இருப்பவர்கள் இங்கு குழப்பத்தை ஏற்படுத்தும் முகமாக இங்குள்ளவர்களுக்கு பணம் அனுப்பி குழப்பத்தை ஏற்படுத்துகின்றனர். வெளிநாட்டு தொடர்புடையவர்கள் இங்கே இராணுவத்துக்கு எதிராக பொய்ப் பிரசாரம் முன்னெடுத்து வருகின்றனர். இந்த இராணுவம் கொடுமையானது, இராணுவம் இங்கே தேவையற்றது என்று. ஆனால், தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள் இங்குள்ள இராணுவத்தினரால் தமிழ் மக்களுக்கு நன்மை செய்யப் படுகின்றது என்று.

அத்தோடு, தமிழ் மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் நாங்கள் முப்படையினரும் புரிவோம். அத்தோடு புத்தாண்டை முன்னிட்டு தமிழ்க் குடும்பம் ஒன்றுக்கு இந்த வீட்டை அமைத்துக் கொடுத்ததையிட்டு இலங்கை இராணுவத்தினர் ஆகிய நாங்கள் பெருமைப்படுகின்றோம்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு நான் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ள பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளேன். அத்தோடு கொரோனா நிலைமைகள் தொடர்பிலும் ஆராய்ந்துள்ளேன். தற்போதுள்ள கொரோனா தொற்று நிலைமையை எவ்வாறு நிர்வகிப்பது போன்ற விடயங்கள் தொடர்பில் நான் ஆராய்ந்திருந்தேன்.

சிங்கள - தமிழ் புத்தாண்டை பொதுமக்கள் மிகவும் அமைதியான முறையில் கொண்டாடுவது சிறந்தது எனவும் தெரிவித்தார். (எ-03)

# நாட்டின் பகுதிகளில் கடும் மழை

கொழும்பு,ஏப்.13

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சப்ரகமுவ, மத்திய, மேல், ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப் படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

காற்று: காங்கேசந்துறையிலிருந்து புத்தளம், கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புக்களில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புக்களில் காற்றானது தென்கிழக்கு முதல் கிழக்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது 20 - 30 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

கடல் நிலை: நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புக்கள் சாதாரண முதல் மிதமான அலையுடன் காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ)

# தனித்து போட்டியிடுவதற்கு சுதந்திரக் கட்சி தீர்மானம்



கொழும்பு,ஏப்.13

மாகாண சபைத் தேர்தலில் தனித்து போட்டியிட திட்டமிட்டுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சியை வலுப்படுத்த கிராம மட்டத்தில் ஏற்கனவே பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒரு கட்சியாக எங்களுக்கு முக்கிய தேவை அதிகாரத்தைக் கைப்பற்றுவதாகும். மாகாண சபைத் தேர்தல் வரும்போது, நாங்கள் ஒரு கட்சியாக தனித்து போட்டியிடத் தயாராக இருக்கின்றோம் என்று தெரிவித்தார். (எ)



# வவுனியாவில் கடும் பனிமூட்டத்தால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

வவுனியா,ஏப்.13

வவுனியாவில் நிலவும் கடும் பனிமூட்டத்தால் வாகனச் சாரதிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்பதுடன், மக்களது இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக வவுனியாவில் மழை பெய்து வந்த நிலையில், தற்போது பனிப் பொழிவு ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக நேற்றுத் திங்கள்கிழமை அதிகாலையிலிருந்து ஏ-9 வீதி உட்பட பல பகுதிகள் பனிமூட்டமாக காட்சியளித்தன.

இதனால் அதிகாலையில் தமது கடமைகளுக்குச் செல்லும் வாகனச் சாரதிகள், தனியார் வகுப்புக்களுக்குச் செல்லும் மாணவர்கள், விவசாயிகள், தனியார்த்துறையினர் போன்ற பல்வேறு தரப்பினர் போக்குவரத்தின் போது பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர். (எ)

# வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைது

முாத்தளை,ஏப்.13

மாத்தறை பொலிஸ் பிரிவிலுள்ள வல்கம ரயில் நிலையத்துக்கு அருகில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.



விஷேட அதிரடிப் படையின் ரத்கம முகாமுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் படி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட மைக்ரோ 9 மில்லி மீற்றர் ரக துப்பாக்கி ஒன்றும் மற்றும் மெகஷின் ஒன்றும் விஷேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டன.

46 வயது கொட்டவில, கம்புருகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தோனேஷியாவில் தொடர் இயற்கை சீற்றங்களால் அழிவு!

*185 பேர் உயிரிழப்பு: 45 பேர் மாயம்!*

*ஜகார்த்தா, ஏப். 13*

*இந்தோனேஷியாவில் புயல், வெள்ளம், மண்சரிவு, நிலநடுக்கத்தால் 185 பேர் உயிரிழந்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வீடுகளை இழந்தனர்.*

*'செரோஜா' புயலால் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 177 பேர் உயிரிழந்தனர். இதேசமயம் கடந்த சனிக்கிழமை ஜாவா தீவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் சிக்கி 8 பேர் பலியாகினர்.*

*இந்தோனேஷியாவில் கடந்த 4ஆம் திகதி தொடக்கம் கடும் மழை, காற்று மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டன. தொடர்ச்சியாகப் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி அந்த நாட்டின் கிழக்கு புளோரெஸ் மாவட்டத்தில் 72 பேர் உயிரிழந்தனர்.*

*தவிர, லெம்பாட்டா மாவட்டத்தில் 47 பேரும் அலோர் மாவட்டத்தில் 29 பேரும் உயிரிழந்தனர். இதே போன்று குபாங் நகரில் 6 பேர் உயிரிழந்தனர். இதனால், அந்நாட்டில் புயல், வெள்ளம், நிலச்சரிவு காரணமாக177 பேர் உயிரிழந்தனர். இதுவரை 45 பேரை காணவில்லை என்று கூறப்படுகின்றது.*

*இதேவேளை, அந்நாட்டின் ஜாவா தீவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 8 பேர் பலியாகினர். பலர் காயமடைந்தனர். 1189 பேர் வீடுகளை இழந்து பொது இடங்களில் தஞ்சடைந்துள்ளனர். (ஐ)*



# எமது கொரோனா தடுப்பூசி செயல்திறன் குறைந்ததே

## வெளிப்படையாக கூறியது சீனா!

*பீஜிங், ஏப். 13*

*சீனாவில் தயாரிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசிகளின் செயல்திறன் குறைவாக உள்ளது என்று சீனாவின் நோய் கட்டுப்பாடு தொடர்பான மூத்த அதிகாரியான காவ் ப்பூ தெரிவித்துள்ளார். அத்துடன், தடுப்பூசியின் செயல்திறனை அதிகரிக்க பல கொரோனா தடுப்பூசிகளை கலந்து பயன்படுத்த ஆலோசிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*சீனா கொரோனா தொற்று தடுப்புக்காக 4 தடுப்பூசிகளை தயாரித்துள்ளது. இவற்றை வெளிநாடுகளில் பரிசோதனை செய்தபோது அவற்றின் செயல்திறன் 50 வீதத்துக்கும் குறைவாகவே உள்ளன என்று தெரிய வந்துள்ளது.*

*இந்நிலையில், சீனாவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் தலைவராக இருக்கும் காவ் ப்பூ பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றில் கருத்து வெளியிடுகையில்,*

*"கொரோனா தடுப்பூசியின் செயல்திறனை அதிகரிக்க பல தடுப்பூசிகளை கலந்து பயன்படுத்த சீனா ஆலோசித்து கொண்டிருக்கிறது. இதில், கொரோனா தடுப்பூசியின் செயல் திறனை முழுமையாக வெளிக்கொண்டுவர செலுத்தப்படும் டோஸ்களின் எண்ணிக்கையை மாற்றுவது மற்றும் செலுத்தப்படும் டோஸ்களுக்கு இடையிலான காலத்தை மாற்றுவது போன்றவைகள் அடங்கும்" - என்றார்.*

*மேலும், "உலகம் முழுக்க உள்ள கொரோனா தடுப்பூசிகளின் செயல்திறன் சில நேரங்களில் அதிகமாகவும், சில நேரங்களில் குறைவாகவும் இருந்திருக்கின்றன" என்றும் அவர் கூறினார். (ஐ)*

# கும்பமேளாவுக்காக குவியும் மக்கள்: தொற்று நிலை மோசமாகும் அபாயம்!

## பாதிப்பில் பிரேஸிலை முந்தியது இந்தியா!!

*ஹரித்துவார், ஏப். 13*



இந்தியாவில் கொரேனா தொற்று அதி வேகமாகப் பரவி வருகின்றது. இந்நிலையில், புனித கங்கையில் நீரா டும் கும்பமேளா திருவிழாவுக்காக பல்லாயிரக்கணக்கில் மக்கள் குவிந்து வருகின்றனர்.

இந்நிலை இந்தியாவில் தொற்று பரவலை மோசமடையச் செய்யும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இமாலாய பிரதேசத்தின் ஹரித்துவார் நகரில் நேற்று திங்கட்கிழமை கும்பமேளா குளியலுக்காக பக்தர்கள் ஒன்றுகூடினர். மிக அதிகளவான மக்கள் கூடியமையால் சுகாதார விதிகளை பின்பற்றச் செய்ய முடியாமல் அதிகாரிகள் திணறி வருகின்றனர்.

கங்கை ஆற்றில் குளிப்பது தங்களின் பாவங்களை போக்கி தூய்மைப்படுத்தும் என்று இந்து மக்கள் நம்புகின்றனர். கும்பமேளா ஒவ்வொரு 12 வருடங்களுக்கும் ஒரு முறை இடம்பெறுகின்றது. அலகாபாத், ஹரித்துவார், நாசிக், உஜ்ஜைனி என நான்கு நகரங்கள் இந்தப் பாரம்பரிய தொடர்கிறது.

அண்மை நாட்களில் இந்தியாவில் கொரோனா தொற்று ஒரு இலட்சத்தை கடந்து வரும் நிலையில் ஹரித்துவாரில் நேற்று பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடினர். இதனால், தொற்று எண்ணிக்கை மேலும் உச்சமடையும் என்று எச்சரிக்கப்படுகின்றது.

இதனிடையே கும்பமேளாவை இரத்துச் செய்யுமாறு சுகாதார நிபுணர்கள் அரசுக்கு எச்சரித்தனர். ஆனால், கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளை பின்பற்றி இந்நிகழ்வை தொடரச் செய்வதிலேயே அரசு உறுதியாக இருந்தது. ஆனால், அதிகளவில் மக்கள் கூடுவதால் அவர்களை விதிகளை பின்பற்ற முடியவில்லை என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், கடுமையான - அவசர நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் நிலைமை மோசமடையும். இதில், தடுப்பூசிகளை அளிப்பதும் அடங்கும். இது வரை இந்தியாவில் 10 கோடி தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், வைரஸ் பரவும் வேகத்தை தடுக்க இது மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தொற்றால் அதிகம் பேர் பாதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கையில் இந்தியா பிரேஸிலை முந்தியது. நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் ஒரு இலட்சத்து 68ஆயிரம் பேர் தொற்றாளர்கள் இனங்காணப் பட்டனர்.

இதனால், இந்தியாவில் நேற்று வரை ஒரு கோடியே 35 இலட்சம் தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். பிரேஸிலில் நேற்றுவரை ஒரு கோடியே 34 இலட்சம் பேரே தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். இதனால், தொற்றால் பாதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கையில் உலகளாவிய ரீதியில் இரண்டாவது இடத்தை பிடித்தது இந்தியா. (ஐ)

# இயல்புக்கு நிலைக்கு திரும்புகிறது பிரிட்டன்!

*லண்டன், ஏப். 13*

*பிரிட்டனில் கொரோனா தொற்று கட்டுக்குள் வந்துள்ளதால் அங்கு மக்களுக்கு தேவையான தளர்வுகளை அரசாங்கம் அறிவித்து வருகின்றது. கொரோனா தடுப்பூசி செலுத்துவதைத் தீவிரப்படுத்தியதைத் தொடர்ந்து பிரிட்டனிலும் கொரோனா தொற்று விகிதம் குறைந்துள்ளது.*

*பிரிட்டனில் கடந்த சில வாரங்களாக 5 ஆயிரத்துக்கும் குறைவானவர்களே தினசரி கொரோனாவால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். பிரிட்டனில் 60வீதம் கொரோனா தொற்று குறைந்துள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. கொரோனா தொற்றுப் பரவல் குறைந்துள்ளதன் காரணமாக பிரிட்டனில் தளர்வுகள் நடைமுறைக்கு வருகின்றன.*

*இதன்படி, அனைத்து கடைகளையும் திறக்கலாம், மக்கள் நெருக்கமாக கூடும் இடங்களான ஜிம், முடி திருத்தும் நிலையங்களை திறக்கலாம், உணவகங்கள் மற்றும் மதுபான விற்பனை நிலையங்களை திறக்கலாம், நூலகங்கள், பொழுபோக்கு நிலையங்களை திறக்கலாம், திருமண விழாக்களில் 15 பேரும், இறுதிச் சடங்குகளில் 30 பேரும் பங்கேற்க அனுமதிக்கப்படுகிறது.*

*கொரோனா ஊரடங்கு தளர்வுகளை அறிவித்தாலும் மக்கள் கவனமாக இருக்க வேண்டும் என்று பிரிட்டன் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார். (ஐ)*





# அணு உலை விபத்து பயங்கரவாத சதி!

## ஈரான் குற்றச்சாட்டு

*தெஹ்ரான், ஏப். 13*

*ஈரானின் நாடான்ஸ் அணு உலையில் ஏற்பட்ட விபத்து பயங்கரவாத சதிச் செயல் என்று அந்த நாட்டு அரசு குற்றம் சாட்டியுள்ளது.*

*இதுகுறித்து ஞாயிற்றுக்கிழமை ஈரான் அரசு வெளியிட்ட அறிக்கையில், "நாடான்ஸ் ஆலையின் ஒரு பகுதியில் திடீரென விபத்து ஏற்பட்டது. இதன் காரணமாக மின்சார விநியோகத்தில் தடை ஏற்பட்டது. பயங்கரவாத சதி காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் கதிரியக்கக் கசிவு ஏதும் ஏற்படவில்லை. யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதுகுறித்து விசாரணை நடந்து வருவதாக ஈரான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இஸ்ரேல், சைபர் தாக்குதல் மூலம் இதனை நடத்தி இருக்கலாம் என ஈரான் சந்தேகிப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.*

*ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் அணு ஆயுத ஒப்பந்தம் தொடர்பாக ஈரான் - அமெரிக்க அதிகாரிகளுக்கு இடையே சமீபத்தில் பேச்சு நடந்தது. இந்த நிலையில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. (ஐ)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80 உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு எதிராக இலஞ்ச, ஊழல் விசாரணை!

கொழும்பு, ஏப். 13

**உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாக உள்ள 80 அரசியல்வாதிகளுக்கு எதிராக இலஞ்ச, ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

- இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள் பிரதேச சபை மற்றும் நகர சபை உறுப்பினர்கள் என ஆணைக்குழுவின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய வர்களில் ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி உறுப்பினர்களும் இருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கிடையில், இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவுக்குக் கல்வித்துறை தொடர்பில் அதிகளவு எண்ணிக்கையிலான புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும் ஆணைக்குழு அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)



ஈழத்து குருசாமிகள் ஒன்றியத்தால் கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் (பாபு சர்மா) 'சிவாகமஞானவாரி' பட்டம் வழங்கி கடந்த 10ஆம் திகதி கௌரவிக்கப்பட்டார்.

# மல்லாகம் நீதிமன்றின் முக்கிய அறிவிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 13

மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்று திங்கட்கிழமை தவணையிடப்பட்ட விளக்கமறியல் உள்ளிட்ட அனைத்து வழக்குகளும் எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமைக்கு மறுதவணையிடப்பட்டுள்ளன என்று நீதிமன்றப் பதிவாளர் க. கஜரூபன் அறிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமையை அரசாங்கம் சிறப்பு விடுமுறை தினமாக அறிவித்தமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஐ-3)

# புலிகளின் ஆயுதம் விற்பனை வழக்கு: பாதாள உலகக் குழுவினர் விடுதலை!

கொழும்பு, ஏப். 13

விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை தேடி எடுத்து அவற்றை விற்பனை செய்த வழக்கில் பிரபல பாதாள உலகக் குழு உறுப்பினரான 'கனேமுல்ல சஞ்சீவ' எனப்படும் சஞ்சீவ சமரரத்ன உள்ளிட்ட 11 சந்தேகநபர்களும் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தினால் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு பிரதம நீதிவான் புத்திக ஸ்ரீராகல முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

புலிகள் அமைப்பினர் போர் காலத்தில் வடக்கு, கிழக்கில் புதைத்து வைத்தனர் என்று கூறப்படும் கிளைமோர் குண்டுகள், ரி-56 ரக துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை தோண்டியெடுத்து கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளுக்கு கடத்தி இரகசியமான முறையில் பாதாள உலகக்குழு உறுப்பினர்களுக்கு விற்பனை செய்தமை மற்றும் கொள்வனவு செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அமைய, குறித்த 11 பேருக்கும் எதிராக வழக்கு தொடர்வதற்கு போதுமான சாட்சிகள் இல்லையென சட்ட மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் ஏனைய நான்கு சந்தேகநபர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினர் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த நீதிவான் இந்த தீர்ப்பை அறிவித்தார்.

வத்தளை பகுதியில் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட முன்னாள் உறுப்பினரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய சோதனைகளை முன்னெடுத்த கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கனேமுல்ல சஞ்சீவ உள்ளிட்ட 15 பேரை கைது செய்திருந்தனர்.

சந்தேகநபர்கள் கடந்த இரண்டரை வருடங்களுக்கும் அதிக காலம் தடுத்து வைப்பு உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கம்பஹாவில் விசேட சுற்றிவளைப்பு 100 கிலோ 'ஐஸ்' போதை சிக்கியது!

கொழும்பு, ஏப். 13

போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் நேற்று நடத்திய விசேட நடவடிக்கையில் கம்பஹாவில் 100 கிலோ ஐஸ் ரக போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன. அத்துடன் மேலும், ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா - சபுகஸ்கந்த - ரத்கஹவத்தை பிரதேசத்தில் வைத்து பொலிஸ் போதைப் பொருள் பணியகத்தால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

99 பக்கெற்றுகளில் பொதி செய்யப்பட்ட நிலையில் குறித்த ஐஸ் போதைப்பொருள்கள் மீட்கப்பட்டன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஜா-எல, நிவந்தம பிரதேசத்தில் 13 கிலோ கிராம் ஐஸ் ரக போதைப்பொருளுடன் இரண்டு பெண்கள் உட்பட 6 பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளுக்கு அமைவாகவே இந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றது. ஹெரோயின் தொடர்பில் சுற்றிவளைப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து ஐஸ் போன்ற போதைப்பொருட்களை இந் நாட்டிற்கு கொண்டு வருவது அதிகரித்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# பிரபாகரன் புராணம் பாடியோர் எனது பாதையை ஏற்கின்றனர்!

## இப்படி சொல்கிறார் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், ஏப். 13

"தேசிய நீரோட்டம், பாராளுமன்ற ஜனநாயகம், தேசிய நல்லிணக்கம் ஊடான பாதையே எமது மக்களின் பிரச்சனைகளுக்கான சிறந்த தீர்வை தரும் என கூறி அதன்வழியில் அனைவரும் பயணிக்க வருமாறு கோரியிருந்தேன். ஆனால், எனது அழைப்பை துரோகம் என்று பிரபாகரனின் புராணம் பாடிய வர்கள் கூறிவந்தார்கள். இன்று ஏற்றுக்கொள்கின்றனர்"

- இப்படி கூறியுள்ளார் ஈ.பி.டி.பி. கட்சியின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா.

தொலைக்காட்சி நிகழ்வு ஒன்றில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அளிக்கப்பட்ட பதிலிலேயே டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு கூறினார் என்று அவரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், "அத்துமீறி எல்லைதாண்டி சட்டவிரோத தொழில் முறைகளை பயன்படுத்துகின்ற இந்திய கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பாக பல்வேறு வழிமுறைகள் பரசீலிக்கப்பட்டு வருகின்றதே தவிர தீர்மானங்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

கடல் வளத்தையும் எமது கடற்றொழிலாளர்களையும் பாதிக்கும் இந்திய மீனவர்களது எல்லைதாண்டும் அத்துமீறிய சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளை முழுமையாக நிறுத்த வேண்டும் என்பதே எனது நோக்கமாக உள்ளது.

குறிப்பாக இந்தியா உட்பட பல சர்வதேச நாடுகளினாலும் எமது நாட்டிலும் தடைசெய்யப்பட்ட ஒரு தொழில் முறைமையை இந்தியக் கடற்றொழிலாளர்கள் மேற்கொள்வதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனாலும், இந்த விடயத்திற்கு தீர்வு காண வேண்டும் என்பதே தேவையாக உள்ளது. அதனடிப்படையில் சில யோசனைகள் பலதரப்பினராலும் முன்வைக்கப்பட்டுள்ளன. அதில் ஒரு யோசனையே அனுமதிப்பத்திரம் வழங்கும் விடயமும். அது ஒரு முடிவல்ல. இதை சிலர் தவறான பார்வையில் சித்தரிக்கின்றனர்.

"1987ஆம் ஆண்டு உருவான இலங்கை இந்திய ஒப்பந்தம் காரணமாக உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையே தமிழ் மக்களிளுக்கு கௌரவமான அரசியல் தீர்வாக அமையும் என 34 வருடங்களாக நான் கூறிவருகின்றேன். இதை ஏனைய தமிழ் தலைமைகள் போட்டுடைத்துவிட்டனர். இன்று ஜெனிவாவில் அதை சுட்டிக்காட்டியதும் அதை அவர்கள் கையிலெடுத்துள்ளனர் - என்றார். (ஐ)

# 5000 ரூபா புத்தாண்டு கொடுப்பனவு: 32,277 குடும்பங்கள் மன்னாரில் தெரிவு!

மன்னார், ஏப். 13



தமிழ் - சிங்கள புது வருடத்தை ஒட்டி குறைந்த வருமானம் உடைய குடும்பங்களுக்கான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்காக 32,277 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் ஆரம்ப நிகழ்வு நேற்று திங் கட்கிழமை மன்னார் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதன்போது, தெரிவு செய்யப்பட்ட சமுர்த்திப் பயனாளிகள் சிலருக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது.

இந்நிலையில், மன்னார் மாவட்டத்தில் சமுர்த்தி பயனாளிகள் குடும்பம், குறைந்த வருமானத்தை கொண்ட குடும்பம், முதியோர் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளும் குடும்பங்கள், அங்கவீன கொடுப்பனவு, சிறுநீரக நோய் காரணமாக கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும் குடும்பங்கள் என 5 கட்டமாக 32,277 குடும்பங்கள் குறித்த 5 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கலுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# 105 தொன் தே. எண்ணெய் மீண்டும் ஏற்றுமதி

கொழும்பு, ஏப். 13

105 மெட்ரிக் தொன் சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெய் கொள்கலன்களை மீள் ஏற்றுமதிக்காக கப்பலில் ஏற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

கட்டான ரிபைனரி தனியார் நிறுவனம் நாட்டுக்கு கொண்டு வந்த 6 கொள்கலன்கள் மீள் ஏற்றுமதி செய்யப்படுவதாக சுங்க ஊடகப்பேச்சாளர், பிரதி சுங்க அத்தியட்சகர் சுதத்த சில்வா தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு,ஏப்.13

பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருள்களை மீண்டும் போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதான பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகள் உட்பட 20 பேருக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்தக் குழுவை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு தலைமை நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார். (எ)



## யாழில் போலி அரச முத்திரையுடன் சட்டவிரோத மதுபான நிலையம்

### முற்றுகையில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,ஏப்.13

யாழ்ப்பாணம் குற்ற விசாரணைப் பிரிவினரால் யாழ். வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள கட்டமொன்று சோதனைக்குட் படுத்தப்பட்டது.

இதன்போது குறித்த கட்டடத்தில் சட்டவிரோதமாக மதுபானம் உற்பத்தி செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறு சட்டவிரோதமாக மதுபானத்தை உற்பத்தி செய்து, அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டதைப் போன்ற முத்திரை பதித்து இவற்றை விநியோகிக்க முயற்சித்துள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்தது. இவ்வாறு போலியான முத்திரைகளும் இதன்போது கைப்பற்றப்பட்டன.

அத்தோடு இங்கு சட்டவிரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட 750 மில்லி லீற்றர் கொள்ளளவு கொண்ட 42 மதுபான போத்தல்களும், 180 மில்லி லீற்றர் கொள்ளளவு கொண்ட 262 மதுபான போத்தல்களும், 3000 லீற்றர் சட்டவிரோத மதுபானம் மற்றும் போலியான அரச அனுமதி முத்திரை என்பன கைப்பற்றப்பட்டன.

இதுதொடர்பில் மல்லாகம் பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயது சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

இதுதொடர்பில் யாழ். குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவு அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

### பரம்பரை அரசியல் கேள்விக்குறி

# மாகாண சபைத் தேர்தல் நடத்த அஞ்சுகிறது அரசு

### சிறீதரன் எம்.பி. குற்றச்சாட்டு



**கிளிநொச்சி,ஏப்.13**

**பரம்பரை அரசியல் கேள்விக்கு உட்படுத்தப்படும் என்ற அச்சத்தில் அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்த அஞ்சுகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அவரிடம் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறுவது சம்பந்தமாக எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. எந்த முறையில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும், எப்போது நடத்தப்பட வேண்டும் என அரசாங்கம் தீர்மானித்தால் நாங்கள் அந்த மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம்.

குறிப்பாக மாகாண சபை என்பது வடக்கு, கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளை நிறைவு செய்வதற்கான ஒரு ஆரம்பப் புள்ளியாகவே கொண்டு வரப்பட்டது. அந்த அடிப்படையில் மாகாண சபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும்.

அது என்ன முறையில் நடத்தப்பட வேண்டும், எப்போது நடத்தப்பட வேண்டும் என்பதற்கு அப்பால், விரைவாகவும் வேகமாகவும் அந்த மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

இந்தத் தேர்தலை நடத்தி உடனடியாக மாகாண சபைகளில் அதிகாரப் பரவலாக்கல், அதன் ஊடான மக்கள் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.

19ஆம் திகதி தீர்மானிக்கின்ற திகதியென்பது பலமுறை அவர்களால் சொல்லப்பட்ட செய்திகள். இன்னுமின்னும் அதன் காலம் இழுத்தடிக்கப்படலாம். காலத்தை இழுத்தடிக்காமல் உடனடியாக முடிவு எடுக்கப்பட வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

விரக்தி அடைந்திருக்கின்ற சிங்கள மக்கள் அரசுக்கு எதிராக கட்டாயம் வாக்களிப்பார்கள். அந்த வாக்களிப்பு என்பது இந்த அரசை கட்டாயம் ஆட்டம் காணச்செய்யும்.

அடுத்து அவர்களின் அரசியல் பாரம்பரியம் அல்லது பரம்பரை அரசியல் என்பது கேள்விக்கு உட்படுத்தப்படும் என்ற பயத்தின் காரணமாகவே அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்த பின்னடிக்கின்றது- என்றார். (எ)

## நெடுஞ்சாலையில் பொறுப்பற்ற முறையில் பயணிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை

கொழும்பு, ஏப்.13

பண்டிகை காலங்களில் அதிவேக நெடுஞ்சாலைகளில் பொறுப்பற்ற முறையில் பயணிப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பேஸ்புக்கில் பரவிய சில படங்களை அடுத்து விதிமுறைகளை மீறியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சித்திரைப் புத்தாண்டு காலத்தில் நெடுஞ்சாலையை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அதிவேக நெடுஞ்சாலைகளில் கடுமையான கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (எ)

# திறமையற்ற தலைமைத்துவமே பொருளாதார வீழ்ச்சிக்கு காரணம்

### பாலித ரங்கே பண்டார விமர்சனம்

கொழும்பு,ஏப்.13

அரசாங்கத்தின் செயல்திறமை மற்றும் உரிய தலைமைத்துவம் இல்லாமையே நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வாழ்க்கைச்செலவு அதிகரிக்கக் காரணமாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார பிரச்னை மற்றும் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு குறித்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில்:

நாடு பாரிய பொருளாதார பிரச்னைக்கு முகம்கொடுத்து வருகின்றது. பெற்றுக்கொண்ட கடன் தவணைகளை அடைக்க முடியாதிருக்கின்றது. மக்கள் அன்றாட வாழ்க்கைச்செலவை சமாளிக்க முடியாது கஷ்டப்பட்டு வருகின்றனர். மக்கள்



எதிர்கொண்டுள்ள இந்த நிலைமையை போக்க அரசாங்கத்திடம் முறையான வேலைத்திட்டம் இல்லை. அரசாங்கத்தின் இந்த நிலைக்கு அரசாங்கத்தின் செயல்திறமை இல்லாமை மற்றும் உரிய தலைமைத்தும் இல்லாமல் இருப்பதே காரணமாகும்.

மேலும், கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் நாங்கள் நாட்டின் கடன் தவணைகளை முறையாக செலுத்திவந்தோம். மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்கினோம். அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை மேற்கொண்டோம். நாட்டின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்தோம். கிராம எழுச்சி வேலைத்திட்டம் மூலம் கிராமங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தோம். இதற்கு சிறந்த அரசியல் முகாமைத்துவமே காரணமாகும்.

அத்துடன் அரசியல் அனுபவம் இல்லாமல் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களின் விளைவே நாட்டின் பொருளாதார வீழ்ச்சி மற்றும் பொருள்களின் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியாமல் போயிருக்கின்றது. டொலரின் பெறுமதி 205 ரூபா வரை உயர்ந்துள்ளது. ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்து செல்கின்றது. அதனால்தான் நாளுக்கு நாள் பொருள்களின் விலை அதிகரித்துச் செல்கின்றது. திறமையற்ற தலைமைத்துவமே இதற்குக் காரணமாகும்- என்றார். (எ)

## நன்றி நவிலல் ....



எனது அன்புக் கணவர்

**அமரர் திரு.வே.சிவஞானசோதி**

அவர்களை இழந்த தருணத்தில் எங்கள் குடும்பத்திற்கு நீங்கள் அளித்த அனுதாபங்கள், அன்பு மற்றும் ஆதரவுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர்வளையங்கள் மற்றும் இரங்கல் செய்தி அனுப்பியவர்களுக்கும் நினைவுரைகள் ஆற்றியவர்களுக்கும் இரங்கல் கூட்டங்களை நடத்தியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் நன்றி செலுத்த முடியாமைக்கு வருந்துகின்றோம்.

**தகவல்: மனைவி, சகோதரர்கள் மற்றும் குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஐ.பி.எல்லில் 350 சிக்ஸர் கிறிஸ் கெய்ல் மைல்கல்!



மும்பை, ஏப். 13

பஞ்சாப் கிங்ஸின் அதிரடி வீரரான கிறிஸ் கெய்ல் 350 சிக்ஸர் என்ற மைல்கல்லை நேற்று கடந்தார்.

அதிரடி ஆட்டக்காரரான மேற்கிந்தியத் தீவுகளின் கிறிஸ் கெய்ல் ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட்டில் பஞ்சாப் கிங்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார்.

நேற்றைய தினம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு எதிராக பஞ்சாப் கிங்ஸ் அணி விளையாடியது. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணிக்காக கிறிஸ் கெய்ல் 28 பந்துகளில் 40 ஓட்டங்களை சேர்த்தார். இதில் 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்கள் அடக்கம்.

இதில், முதலாவது சிக்ஸரை அவர் பறக்க விட்ட போது, ஐ.பி.எல்லில் 350 சிக்ஸர்கள் என்ற மைல்கல்லை தொட்டார். நேற்றைய தினமே 351ஆவது சிக்ஸரையும் அடித்தார். இதன் மூலம், ஐ.பி.எல்லில் அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளார்.

இரண்டாவது இடத்தில் டி வில்லியர்ஸும், மூன்றாவது இடத்தில் எம். எஸ். டோனியும் உள்ளனர். (ஐ)






# இறுதிவரை பரபரப்பு: பஞ்சாப் கிங்ஸ் வெற்றி

## சாம்ஸனின் அதிரடி சதம் வீண்!

மும்பை, ஏப். 13

ரசிகர்களை இருக்கையின் நுனிக்கு கொண்டு வந்த ஆட்டத்தில் இறுதித் தருணத்தில் பஞ்சாப் கிங்ஸ் அணி 4 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. ராஜஸ்தான் றோயல்ஸின் சஞ்சு சாம்ஸனின் அதிரடி சதமும் வீணானது.

ஐ.பி.எல். இருபது - 20 தொடரில் நேற்று மும்பையில் நடந்த போட்டியில் பஞ்சாப் கிங்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தலைவர் சஞ்சு சாம்ஸன் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி அதிரடியில் மிரட்டியது. தொடக்கம் கொடுத்த அணித் தலைவர் கே.எல். ராகுல் சிக்ஸர், பௌண்ட்ரியை மாறி மாறி விளாசினார். 50 பந்துகளை எதிர் கொண்ட அவர் 7 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்களுடன் 91 ஓட்டங்களைக் குவித்தார்.

மூன்றாவது வீரராகக் களமிறங்கிய கிறிஸ் கெய்லும் தன் பங்குக்கு ஓட்டங்களை குவித்தார். அவர் 28 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களை விளாசி 40 ஓட்டங்களைப் பெற்று பராக்கின் பந்தில் ஸ்ரோக்ஸிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

பின்னர் வந்த தீபக் ஹூடோ அதிரடியில் மிரட்டினார். 4 பௌண்ட்ரிகளுடன் 6 சிக்ஸர்களை பறக்க விட்ட அவர் 28 பந்துகளில் 64 ஓட்டங்களைக் குவித்தார்.

இப்படி ஆடிய பஞ்சாப் அதிரடி ஆட்டக்காரர்களின் எழுச்சியை கட்டுப்படுத்த முடியாது ராஜஸ்தானின் அணித் தலைவர் திணறினார். ஓட்டங்களை கட்டுப்படுத்த அவர் 8 பேரை பந்து வீச வைத்தார். ஆனால், அதற்குப் பலன் கிடைக்கவில்லை. இதனால், 20 ஓவர்கள் நிறைவில் பஞ்சாப் கிங்ஸ் அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 221 ஓட்டங்களைக் குவித்தது.

ராஜஸ்தானின் பந்துவீச்சில் சகாரியா 3, கிறிஸ் மொறிஸ் 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு 222 ஓட்டங்கள் என்ற மிகப்பெரும் இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடியது ராஜஸ்தான் அணி.

தொடக்கம் கொடுத்த பென் ஸ்ரோக்ஸ் ஓட்டம் எதையும் பெறாமலே ஆட்டமிழந்து ஏமாற்றினார். எனினும், மூன்றாவது வீரராகக் களமிறங்கிய சஞ்சு சாம்ஸன் பஞ்சாப்பின் பந்துகளை வெளுத்து வாங்கினார். ஆனால், அவருக்கு துணையாக ஆட வந்தவர்கள் அதிரடி காட்டுவதிலேயே கவனம் செலுத்தினர். இதனால் ஓட்டவேகம் உயர்ந்தாலும், சீரான இடைவெளியில் விக்கெட்கள் வீழ்ந்தன.

ஜோஸ் பட்லர் 13 பந்துகளில் 25 ஓட்டங்கள், சிவம் டுபே 15 பந்துகளில் 23, ரியான் பராக் 11 பந்துகளில் 25 ஓட்டங்கள் என வீழ்ந்தனர். ஆனாலும் அசராமல் நின்று அதிரடியில் மிரட்டினார் சஞ்சு சாம்ஸன். அவர், 63 பந்துகளில் 12 பௌண்ட்ரிகள், 7 சிக்ஸர்களை விளாசிய அவர் 119 ஓட்டங்களை குவித்து இறுதி விக்கெட்டாக வீழ்ந்தார்.

இதனால், இறுதித் தருணத்தில் - 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 217 ஓட்டங் களையே ராஜஸ்தான் பெற்றது.

பஞ்சாப்பின் பந்துவீச்சில் அர்ஸ்தீப் சிங் 3, முஹமட் ஷமி 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக சஞ்சு சாம்ஸன் தெரிவானார்.

# தென்னாபிரிக்காவிடம் வீழ்ந்தது பாகிஸ்தான்!

ஜொகன்னர்ஸ்பேர்க், ஏப். 13

ஜோர்ஜ் லிண்டின் சகலதுறை ஆட்டத்தால் பாகிஸ்தான் அணியை 6 விக்கெட்களால் வெற்றி கொண்டது தென்னாபிரிக்க அணி.

தென்னாபிரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் அணி தற்போது 4 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று வருகின்றது. இதில், முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்ற நிலையில், இரு அணிகளும் நேற்று ஜொகன்னர்ஸ்பேர்க்கில் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

முஹமட் றிஸ்வான், சர்ஜில் கான் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர். றிஸ்வான் முதல் பந்திலேயே லிண்டின் பந்தில் மார்க்ரமிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த பாபர் அஸாம் பொறுமையாக ஆடினார். எனினும் 12 பந்துகளை எதிர்கொண்ட சர்ஜில்கான் ஒரு சிக்ஸருடன் 8 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஹபீஸ் ஓரளவுக்கு அதிரடி காட்டினார். ஆனால், அவரையும் லிண்ட் நிலைக்க விடவில்லை. 23 பந்துகளில் 6 பௌண்ட்ரிகளுடன் 32 ஓட்டங்களை எடுத்த ஹபீஸ் விக்கெட் காப்பாளர் கிளஸனிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

ஆனால், பின்வந்த வீரர்கள் சோபிக்கவில்லை. இந்நிலையில் 50 பந்துகளில் 5 பௌண்ட்ரிகளுடன் 50 ஓட்டங்களை எடுத்த அணித் தலைவர் பாபர் அஸாமும் ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 140 ஓட்டங்களை எடுத்தது பாகிஸ்தான் அணி.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் லிண்ட், வில்லியம்ஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

இலகுவான இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு, ஜன்னெமன் மலன், மார்க்ரம் இணை தொடக்கம் கொடுத்தது. மலன் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் மார்க்ரம் நிலைத்தாடினார். இந்நிலையில், லூப்பே 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த வான் பில்ஜோனும் 2 ஓட்டங்களுடன் வெளியேறவே, அதிரடியாக 30 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களை விளாசி 54 ஓட்டங்களை குவித்த மார்க்ரமும் ஆட்டமிழந்தார்.




14 ஓவர்களில் தென்னாபிரிக்க அணி 4 விக்கெட்கள் இழப்புக்கு 141 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

ஹென்றிச் கிளஸன் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 36, லிண்ட் 2 சிக்ஸர்களுடன் 20 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பாகிஸ்தானின் பந்துவீச்சில் ஹைதர் 2 விக்கெட்களையும், ஹஸ்னைன், ஹசன் அலி ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org